Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 28 ஞாயிற்றுக்கிழமை (10-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:196

# சொல்ஹெய்மின் நீக்கம் புலிகளுக்கு அதிருப்தி!

## நிலைமையைத் தெளிவுபடுத்தி இன்று வன்னியிலிருந்து அறிக்கை

- உதயன் அரசியல் செய்தியாளர் -

யாழ்ப்பாணம்,ஜூன்10

**இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், சமாதான நடவடிக்கைகளிலிருந்து புறந்தள்ளப்பட்டிருப்பது குறித்து விடுதலைப் புலிகள் பெரும் அதிருப்தியும் விசனமும் அடைந்திருப்பதாகத் தெரிகின்றது. இது தொடர்பாகத் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் இன்று வன்னியிலிருந்து உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றை வெளியிடும் என்றும் தெரியவருகின்றது.**

லண்டனில் புலிகளின் வட்டாரங்கள் நேற்றிரவு இத்தகவலை வெளியிட்டன.

சமாதான முயற்சிகளில் நோர்வே நடுநிலையாளராகச் செயற்பட வேண்டும் என்பதே அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினரின் எதிர்பார்ப்பாகும்.

இதன்படி எந்த முடிவையும் - முன்னகர்வையும் - இரு தரப்புடனும் கலந்தாலோசித்த பின்னரே அதை ஒரு முடிவாக நோர்வே வெளியிட முடியும் என சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆனால் -

தற்போது நடைபெற்றுவரும் பேச்சுக்களை திடீரெனத் திசை மாற்றி, அதனை உயர் மட்டத்தில் பேசுவது என்று ஜனாதிபதி சந்திரிகாவும் அமைச்சர் ஜக்லண்டும் தம்பாட்டில் பேசித் தீர்மானித்து ஒரு தலைப்பட்சமாக அறிவித்திருக்கின்றார்கள் என்று புலிகள் தரப்பு சுட்டிக்காட்டுகின்றது.

இது சமாதான முயற்சி மற்றும் அதில் நோர்வேயின் பங்களிப்பு ஆகியவை தொடர்பாகப் பல குழப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கான்ஸ்டபிள் காயம்

மட்டக்களப்பு,ஜூன்10

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள கல்லாறு பொலீஸ் நிலையக் காவலரண் மீது நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்கி பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்தார். இந்தக் கான்ஸ்டபிள் சிகிச்சைகளுக்காக அம்பாறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-6)

### வடக்கு, கிழக்கு அரச ஆஸ்பத்திரிகளில்

## திட்டமிட்டபடி டாக்டர்கள் நாளை முதல் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்10

விசேட மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்குவதில் அரசு காட்டும் பாரபட்சத்தை எதிர்த்துத் திட்டமிட்டபடி நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணி முதல் வடக்கு, கிழக்கில் உள்ள அரச ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் மருத்துவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.கிளை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அது வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வேலை நிறுத்தக் காலத்தில் வெளிநோயாளர் பிரிவுகளிலும் கிளினிக்குகளிலும் மருத்துவர்கள் பணிபுரியமாட்டார்கள். எனினும் அவசர சிகிச்சைகள் யாவும் வழமைபோன்று நடைபெறும்.

விசேட மேலதிகக் கொடுப்பனவு வழங்குவதில் அரசு காட்டிவரும் இன ரீதியான பாரபட்சமான நடவடிக்கையை கைவிட்டு, அது அனைவரையும் சமமாக நடத்தும் வரை எமது வேலை நிறுத்தப் போராட்டம் தொடரும்.

இந்தப் போராட்டத்தால் நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு நாம் மனம் வருந்துகின்றோம். எமது நியாயமான கோரிக்கை வெற்றியடைய மக்களது ஆதரவை வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது. (ம-6)

## அடுத்து விடுதலைப் புலிகளோடு பேசுவாராம் நோர்வே அமைச்சர்



கொழும்பு,ஜூன்10

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமாதான முயற்சிகளில் இதுவரை காலமும் ஈடுபட்டிருந்த நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அந்த நடவடிக்கைகளிலிருந்து புறந்தள்ளப்பட, மேல் மட்டத்தில் அந்த நடவடிக்கையைப் பொறுப்பேற்று மேற்கொள்ளவிருக்கும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் த்ரொப்ஜோன் ஜக்லண்ட் தாம் மிக விரைவில் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கப்போவதாக அறிவித்திருக்கின்றார்.

கடந்த செவ்வாயன்று கொழும்புக்கு வந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்துத் திரும்பிய பின்னர், நோர்வேயில் வைத்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

"புலிகளோடு விரைவில் பேச இருக்கின்றேன்" என்று கூறிய அவர் எங்கே, எப்போது, யாருடன் பேச்சு நடக்கும் என்ற விவரங்களை வெளியிடவில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

### அரசமைப்பு நெருக்கடியால்

## தமது லண்டன் விஜயத்தை ஒத்திவைத்தார் அனுரா!

கொழும்பு,ஜூன்10

நேற்று லண்டனுக்குப் புறப்படவிருந்த சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க, தாம் நாட்டில் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரதம நீதியரசருக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை விடயத்தில் அரசுத் தரப்புக் குளறுபடி செய்து விடலாம் என்று கருதி தமது விஜயத்தைத் தள்ளிப்போட்டுவிட்டார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றத்தில் ஒரேயொரு உறுப்பினரை மட்டும் பெரும்பான்மையாகக் கொண்ட பொது மக்கள் ஐக்கிய முன்னனி அரசுக்கு இந்தப் பிரேரணை மிகுந்த நெருக்கடியைக் கொடுப்பதாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் -

இந்தப் பிரேரணையின் அடிப்படையில் பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணைக்கென நாடாளு

(14ஆம் பக்கம் பார்க்க)

### வடக்குக்கான சேவையில் ஈடுபடும்

## சகல விமானங்களுக்கும் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள்

கொழும்பு,ஜூன்10

தெற்கில் இருந்து வட பகுதிக்கான சேவையில் ஈடுபடும் விமானப் படைக்குச் சொந்தமான சகல விமானங்களும் புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளன என்று புலானாய்வுத் துறையை மேற்கோள்காட்டி சுயாதீன செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதற்கான பணிப்புரைகள் விமானிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 7ஆம் திகதி அனுராதபுரத்திலிருந்து பலாலிக்குச் சென்று கொண்டிருந்த அன்ரனோவ் - 32 ரக விமானத்தை நோக்கி வில்பத்து காட்டுப் பகுதியிலிருந்து நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலை

(14ஆம் பக்கம் பார்க்க)

### உள்கட்சிப் பூசலால்

## முஸ்லிம் காங்கிரஸ் கட்சி விரைவில் பிளவுபடும் அபாயம்!

கொழும்பு,ஜூன்10

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் மீண்டும் உக்கிரமடைந்திருக்கும் உள்கட்சிப் பூசலால் அது பிளவுபடும் நிலைமை தென்படுவதாக கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக அமைச்சர் ரவூப் ஹக்கீமும் -

முஸ்லிம் காங்கிரஸை உள்ளடக்கிய தேசிய ஐக்கிய முன்னணிகு அமைச்சர் பேரியல் அஷ்ரப்பும் தலைமை தாங்குகின்றனர் என்பது தெரிந்ததே.

ஆனால் -

கடந்த வெள்ளிக்கிழமை - அமைச்சர் ஹக்கீமுக்குத் தெரியாமலேயே - தேசிய ஐக்கிய முன்னணியின் உயர்மட்டக் குழு கூடி, முன்னணியின் நடப்பு வருடத் தலைவியாக அமைச்சர் பேரியல் அஷ்ரப்பைத் தெரிவு செய்தது.

எனினும் முன்னணியின் உயர்மட்டக் குழு முன்னணியின் செயலாளர் பதவியை வகித்த ரவூப் ஹக்கீமை அப்பதவியிலிருந்து மாற்றவில்லை.

தேசிய ஐக்கிய முன்னணியில் ஹக்கீம் புறந்தள்ளப்படுவதால், சீற்றமடைந்திருக்கும் அவர் தனது தலைமையின் கீழ் இயங்கும் முஸ்லிம் காங்கிரஸைப் பிரித்துத் தனியாக இயக்கக்கூடும் என் எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-ம)

## யாழ்.சிறையில் இந்திய மீனவர் உண்ணாவிரதத்துக்கு முஸ்தீபு!

யாழ்ப்பாணம்,ஜூன்10

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 50 இந்திய மீனவர்களும் தம்மை விடுதலை செய்யக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவதற்குத் தயாராகி வருவதாகத் தெரியவருகிறது.

எதிர்வரும் 13ஆம் திகதி தம்மை நீதிமன்றில் ஆஜர் செய்யும் போது தாம் விடுதலை செய்யப்படவில்லை என்றால் தாங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக அவர்கள் கூறியிருப்பதாகத் தெரிகின்றது.

இதேவேளை - யாழ்.சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை அருட்தந்தை ஜெயசலன் அடிகளாரும் குருநகரில் உள்ள சமூக சேவையாளர்களும் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர். உணவு மற்றும் சோப் வகைகளையும் அவர்களுக்கு வழங்கினர்.

### பிரதம நீதியரசருக்கு எதிராக

## குற்ற விசாரணைப் பிரேரணையை எதிர்க்க முஸ்லிம் காங்கிரஸ் முடிவு

கொழும்பு,ஜூன்10

பிரதம நீதியரசருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ள குற்ற விசாரணைப் பிரேரணையை எதிர்ப்பது என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு நீண்ட நேரம் கூடி ஆராய்ந்து கட்சியின் உயர் பீடம் இந்தத் தீர்மானத்தை எடுத்தது.

தற்போது நாடு உள்ள நிலையில் இவ்வாறான ஒரு பிரேரணையைக் கொண்டு வருவது உகந்ததல்ல. முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய வேறு பல விடயங்கள் உள்ளபோது இதற்கு முக்கியத்தும் அளிப்பது அவசியமல்ல. எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் பிரேரணையை எதிர்ப்பது என்று கட்சி தீர்மானித்துள்ளது என்று - தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# ஆனையிறவைப் பிடிக்க 18 மாதங்கள் பங்கருக்குள் காத்திருந்த புலிகள்

## அரசியற்துறை பிரமுகர் கரிகாலன் மட்டக்களப்பில் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜூன்10

ஆனையிறவு முகாமைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக எமது போராளிகள் 18 மாத காலமாக மழை, வெயில் என்று பாராது - கண்துஞ்சாது பதுங்கு குழிகளில் தவங்கிடந்தனர். - இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவரும், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருமான கரிகாலன்.

மட்டக்களப்பு கோராவெளி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி கடந்த செவ்வாயன்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே கரிகாலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஆனையிறவு மீட்புப் போரின் போது பதுங்கு குழியில் இருந்த எமது போராளிகள் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டபோதெல்லாம் வெங்கணாந்திப் பாம்பைக்கூட உணவாக உட்கொண்டனர்.

இறுதியில் 75 போராளிகள் ஆனையிறவு முகாமுக்குள் ஊடுருவித் தாக்கி அங்கிருந்த 40 ஆயிரத்துக்கும் அதிமான இராணுவத்தினரை விரட்டி விட்டனர். எனவே பஞ்சுமெத்தையில் இருந்துகொண்டு விடுதலை காணமுடியாது. விடுதலைப் புலிகளின் ஆள்பலம் அதிகரிக்கப்படல் வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் வளர்ச்சியை அவதானித்துவரும் ஆட்சியாளர்கள் படையினர் ஊடாக எமது இளைஞர்களை அழிக்கத் திரை மறைவில் இரகசியமாகச் செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறான செயல்முறைகள் எமது இயக்கத்தின் வளர்ச்சியை அழிப்பதற்கேயாகும்.

மட்டக்களப்புப் போராளிகள் ஆனையிறவுச் சமரில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து எமது மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-7)



அளவெட்டியில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் 7 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட சந்தைக் கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவில் கலந்துகொள்ள வந்த மேற்படி அமைப்பின் வெளிக்கள திட்ட இணைப்பாளர் ஜோனாஸ் முசி, வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரனினால் அழைத்துவரப்படுவதை படத்தில் காணலாம்.

அருகில் தொழில் நுட்ப உத்தியோகத்தர் க.சிவலோகநாதன் காணப்படுகின்றார். (க-86)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூன்10

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 7ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சாவகச்சேரி

(183554ஏ) (183554பி) (192762ஏ)
(192762பி)

### கரவெட்டி

(174241ஏ) (174241பி) (174241சி)
(174430ஏ) (176461ஏ) (181151ஏ)
(181151பி) (182341ஏ) (182341பி)
(182341சி) (182341டி) (182438ஏ)
(182438பி) (182438சி) (182438டி)
(182438ஈ) (183562ஏ) (183562பி)
(183562சி) (183668ஏ) (183668பி)
(183761ஏ) (183761பி) (183761சி)
(183761டி) (183783ஏ) (183789ஏ)
(185373ஏ) (185373பி) (185403ஏ)
(185403பி) (185403சி) (185403டி)
(185404ஏ) (185404பி) (185644ஏ)
(185644பி) (188151சி) (188352ஏ)
(188407ஏ) (188513ஏ) (188513சி)
(188577ஏ) (188577பி) (188577சி)
(188593ஏ) (188593பி) (189829ஏ)
(189829பி) (189829சி) (189840ஏ)
(189968ஏ) (189968பி) (189997ஏ)
(189997பி) (190014ஏ) (190014பி)
(190020ஏ) (190047ஏ) (190053ஏ)
(190061ஏ) (190095ஏ) (190152ஏ)
(190159ஏ) (190159பி) (190166ஏ)
(190166பி) (190166சி) (190166டி)
(190192ஏ) (190192பி) (190192சி)
(190215ஏ) (190217ஏ) (190217பி)
(190220ஏ) (190220பி) (190220சி)
(190220டி) (190220ஈ) (190229ஏ)
(190229பி) (190229சி) (190229டி)
(190236ஏ) (190240ஏ) (190243ஏ)
(190263ஏ) (190263பி) (190278ஏ)
(190278பி) (190279ஏ) (192502ஏ)
(192502பி) (192504ஏ) (192504பி)
(192523ஏ) (192523பி) (192527ஏ)
(192529ஏ) (192529பி) (192533ஏ)
(192538ஏ) (192538பி) (192538சி)
(192538டி) (192540ஏ) (192540பி)
(192543ஏ) (192543பி) (192546ஏ)
(192557ஏ) (192557பி) (192559ஏ)
(192559பி) (192559சி) (192561ஏ)
(192561பி) (192561சி) (192561டி)
(192565ஏ) (192592ஏ) (192598ஏ)
(192606ஏ) (192610ஏ) (192610பி)
(192613ஏ) (192616ஏ) (192616பி)
(192640ஏ) (192642ஏ) (192643ஏ)
(192645ஏ) (192646ஏ) (192661ஏ)
(192661பி) (192661சி) (192677ஏ)
(192681ஏ) (192681பி) (192681சி)
(192691ஏ) (192694ஏ) (192794பி)
(192694சி) (192695ஏ) (192695பி)
(192698ஏ) (192698பி) (192698சி)
(192720ஏ) (192725ஏ) (192725பி)
(192763ஏ) (192768ஏ) (192799ஏ)
(192799பி) (192803ஏ) (192803பி)
(192803சி) (192806ஏ) (193796ஏ)
(193838ஏ) (193873ஏ) (193941ஏ)
(193941பி) (193965ஏ) (193965பி)
(193965சி) (194066ஏ) (194144ஏ)

### மருதங்கேணி

(190078ஏ) (190226ஏ) (190226பி)

### பருத்தித்துறை

(177558ஏ) (177558பி) (177558சி)
(177558டி) (181345ஏ) (181345பி)
(181376ஏ) (181376பி) (183706ஏ)
(183706பி) (185682ஏ) (185702ஏ)
(185753ஏ) (185753பி) (185766ஏ)
(185766பி) (185766சி) (188109ஏ)
(188109பி) (188109சி) (188109டி)
(188110ஏ) (188110பி) (188368ஏ)
(188368பி) (188543ஏ) (189837ஏ)
(189837பி) (189837சி) (189912ஏ)
(189912பி) (189922ஏ) (189922பி)
(189934ஏ) (189934பி) (189946ஏ)
(189946பி) (189980ஏ) (190018ஏ)
(190018பி) (190018சி) (190028ஏ)
(190049ஏ) (190049பி) (190088ஏ)
(190092ஏ) (190102ஏ) (190102பி)
(190118ஏ) (190118பி) (190120ஏ)
(190120பி) (190120சி) (190121ஏ)
(190124ஏ) (190140ஏ) (190162ஏ)
(190164ஏ) (190164பி) (190175ஏ)
(190175சி) (190185ஏ) (190185பி)
(190195ஏ) (190212ஏ) (190223ஏ)
(190238ஏ) (190238பி) (190238சி)
(190238டி) (190251ஏ) (190267ஏ)
(190267பி) (190267சி) (190275பி)
(190285ஏ) (190289ஏ) (190291ஏ)
(190291பி) (190292ஏ) (190300ஏ)
(190300பி) (190300சி) (192498ஏ)
(192498பி) (192503ஏ) (192503பி)
(192519ஏ) (192522ஏ) (192526ஏ)
(192526பி) (192536ஏ) (192536பி)
(192544ஏ) (192549ஏ) (192570ஏ)
(192571ஏ) (192573ஏ) (192587ஏ)
(192587பி) (192590ஏ) (192590பி)
(192593ஏ) (192601ஏ) (192611ஏ)
(192611பி) (192611சி) (192611டி)
(192611ஈ) (192611எவ்) (192618ஏ)
(192618பி) (192618சி) (192618டி)
(192618ஈ) (192630ஏ) (192630பி)
(192630சி) (192631ஏ) (192632ஏ)
(192637ஏ) (192637பி) (192654ஏ)
(192662ஏ) (192662பி) (192662சி)
(192670ஏ) (192670பி) (192670சி)
(192670டி) (192676ஏ) (192676பி)
(192693ஏ) (192693பி) (192693சி)
(192699ஏ) (192699பி) (192705ஏ)
(192705பி) (192705சி) (192727ஏ)
(192731ஏ) (192731பி) (192731சி)
(192731டி) (192737ஏ) (192742ஏ)
(192742பி) (192750ஏ) (192750பி)
(192761ஏ) (192771ஏ) (1927784ஏ)
(192794ஏ) (192800ஏ) (192808ஏ)
(192808பி) (192818ஏ) (192825ஏ)
(192883ஏ) (193816ஏ) (193816பி)
(193869ஏ) (193979ஏ) (194019ஏ)
(194019பி) (194026ஏ) (194168ஏ)

# 31 குருநகர் மீனவர்களின் படுகொலைத் தினம் இன்று

குருநகர்,ஜூன்10

குருநகரில் இருந்து 'தூயஒளி' படகு மூலம் மண்டைதீவுக் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற 31 குருநகர் மீனவர்கள் கடற்படையினரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட கோர நிகழ்வில் 15 ஆவது வருட நினைவு தினம் இன்றாகும்.

1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி மண்டைதீவுக் கடலில் கரைவலை செய்து கொண்டிருந்த போது குருநகர் மீனவர்களான பெனடிக்ற் கியூபேட் கேசன், பங்கிராஸ் அன்ரனி யூலியஸ், பங்கிராஸ் தார்ச்சியஸ், பங்கிராஸ் விமலதாசன், டேமியன் றூபட் உதயகுமார், அருளானந்தம் பொனிபஸ், அருளானந்தம் பெனடிக்ற், பெனடிக்ற் அலிஸ்ரன், பெனடிகற் லிகோரி, பெனடிக்ற் மகேந்திரன், பற்றிக் அலோசியஸ், அலோசியஸ் லிகோரி, அலோசியஸ் டியுக், எமிலியானுஸ் மக்ஸிமஸ், ஈஸ்வரன், ஞானப்பிரகாசம் ஜெயபாலன், ஞானப்பிரகாசம் ஜெயகாந்தன், அன்ரன் செல்டன் வெயின், சவிரியான் யேசுராசா, முடியப்பு அன்ரனிதாஸ், செபஸ்தியு சேவியர், மனவல் பயஸ், மனவல் மரிய நாயகம், யோண் ஜோர்ச், யோசவ் பர்ணாந்து, மனவல் பற்றிக், ஆசிர்வாதம் அந்தோனிப்பிள்ளை கறிஸ்தோப்பர் எஸதாக்கி, செபமாலை யோசப் சாமிநாதர், முத்துச்சாமி சுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் படுகொலை செய்யபட்டனர்.

இவர்களின் 15 ஆவது நினைவு தினமே இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

இவர்களை விட -

1986 ஆம் ஆண்டு தொடக்கம் 1999 ஆம் ஆண்டு வரை குடாக்கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது 164 மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் பதிவேட்டில் இருந்து இத் தகவல் தெரியவந்துள்ளது.

1986இல் 48 பேரும், 1987 இல் 38 பேரும் 1988இல் 04 பேரும், 1989 இல் 02 பேரும், 1990இல 13 பேரும், 1991இல் ஒரு வரும், 1992இல் 09 பேரும், 1993இல் 19 பேரும், 1994 இல் 17 பேரும், 1995இல் 05 பேரும், 1996இல் 06 பேரும் 1999இல் 02 பேரும் இவ்வாறு பலியாகியுள்ளனர். (ஜ-57)

## 'தாயகம்' சஞ்சிகை வெளியீடு

தேசிய கலை இலக்கியப் பேரவை ஏற்பாடு செய்துள்ள 'தாயகம்' சஞ்சிகை வெளியீடும் விமர்சனமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளன.

கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கவிஞர் இ.முருகையன் க.சட்டநாதன், க.வேல்தஞ்சன் ஆகியோர் விமர்சன உரையை நிகழ்த்துவார்கள். (ஜ-7)

## தமிழ் விழா

கோப்பாய்,ஜூன்10

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் தமழிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ் விழா நாளை திங்கட்கிழமை காலை 9.30இற்கும் நடைபெறவுள்ளது. (ஜ-72)

---

## திருத்தம்

உதயன் 07.06.2001 ஆம் திகதி இதழின் 7ஆம் பக்கத்தில் பிரசுரமான புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய தமிழ்த்தினமும், புனரமைக்கப்பட்ட கட்டடத் திறபபு விழாவும் பற்றிய விளம்பரத்தில்-

தலைவர்:- **திரு.எஸ்.கே. சண்முகலிங்கம்** என்பதற்குப் பதிலாக **திரு.எஸ்.சண்முகலிங்கம்** என்றும்-

கௌரவ விருந்தினர்:- **திரு. செ.இரத்தினம் அவர்கள் (பிரதேச செயலர் - தீவுப்பகுதி தெற்கு)** என்பதற்குப் பதிலாக **திரு.செ. இரத்தினம்** அவர்கள் என்றும் - தவறுதலாக அச்சாகிவிட்டன. அவை இரண்டினையும் திருத்தி வாசிக்கவும்.

# ஊர்காவற்றுறை அபிவிருத்திக்கு இவ்வாண்டு 11 லட்சம் ரூபா ஒதுக்கீடு

ஊர்காவற்துறை,ஜூன்10

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைகளுக்கென 2001ஆம் ஆண்டு பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியில் இருந்து 11 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி காரைநகர், அனலைதீவு, ஊர்காவற்துறை ஆகிய பகுதிகளில் வீதிகளைப் புனரமைப்பதற்கும், மயானங்களில் இறுதிக்கிரியைகள் நடத்துவதற்கான மடங்களை அமைப்பதற்கும் பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-16)

# கோண்டாவில் பகுதியில் பொலீஸார் கசிப்பு வேட்டை

## எவரும் சிக்கவில்லை

கோண்டாவில்,ஜூன்10

கோண்டாவில் வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் பொலீஸார் திடீர் கசிப்பு வேட்டையில் ஈடுபட்டனர். எனினும் யாரும் கைது செய்யப்படவில்லை.

கசிப்பு உற்பத்தியாளர்களின் வீடுகள் எனச் சந்தேகிக்கப்படும் வீடுகள் மீது கோப்பாய் பொலீஸார் சோதனைகளை மேற்கொண்டனர். ஆனால் அங்கு கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் எவையும் கிடைக்கவில்லை.

இதேநேரம் -

இப்பகுதியில் உள்ள வெற்றுப் பனங்காணியில் இருந்து கசிப்பு மற்றும் கசிப்புக் காய்ச்சும் கோடா போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுக்கு யாரும் உரிமை கோராததை அடுத்து அப்பகுதியில் வைத்து அவை அழிக்கப்பட்டன. (ம-86)

## பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் பட்டமளிப்பும் பரிசளிப்பும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

சைவ பரிபாலன சபைத் தலைவர் இ.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் போராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் பிரதம விருந்தினராக் கலந்து கொள்வார்.

சைவ பரிபாலன சபையினரால் 2000ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சைவ சித்தாந்த பிரவேச கால பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு பட்டம் வழங்கப்படும்.

2000ஆம் ஆண்டு, தரம் 2 முதல் தரம் 13 வரையான வகுப்புகளுக்கு நடத்தப்பட்ட சைவ நெறித் தேர்வில் பரிசுக்குரியவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்படும். (ம-152)

## செவிப்புலனற்றோர் நிறுவன கூட்டம்

திருகோணமலை செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் மூன்றாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருகோணமலை நகரசபை பொது மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக கூட்டத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய பகுதிகளில் உள்ள செவிப் புலனற்றோர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். கூட்டத்தின் இறுதியில் புதிய நிர்வாக சபை தெரிவும் இடம்பெறவுள்ளது. (ம-6)

## குருபீடாதிபதி ஜனாதிபதியைச் சந்திப்பார்

சுதுமலை,ஜூன்10

சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் விரைவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய பிரதம குருக்களான இவர் இந்துமத குரு பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் முதன் முதலாக ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-7-139)

## மாவட்டமட்ட தமிழ்த்தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்10

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் கரலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

கலைத்திறன் குழு நிகழ்வுகள் எதிர்வரும் 16ஆம் திகதி யாழ்.இந்து மகளிர் கல்லூரி மற்றும் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் -

எழுத்தாக்கப் போட்டிகள் எதிர் வரும் 17ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியிலும் -

இதே தினத்தில் கலைத்திறன் தனி நிகழ்வுகள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

மாவட்டமட்டப் போட்டியில் பங்கு பற்றுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் யாவும் உரிய திகதிகளில் குறித்த நேரத்திற்குச் சமுகம் தருமாறு யாழ்.மாவட்ட தமிழ்த்தினக் குழுவினர் கேட்டுள்ளனர். (ம-10)

## மீண்டும் தொலைபேசி இணைப்பு

ஊர்காவற்றுறை,ஜூன்10

எழுவைதீவு உபதபாலகத்துக்கு மீண்டும் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட இத் தொலைபேசி இணைப்பு இடையில் பல மாதங்களாக செயற்படாதிருந்தது.

இது தொடர்பாக இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவை கோரிக்கை விடுத்ததை அடுத்து மீண்டும் கடந்த மாத இறுதி முதல் தொலைபேசி இணைப்பு மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. (ம-16)

உதயன்

## இளைஞர் ஒழுக்கம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் முந்திய வார இறுதியில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போது, யாழ்ப்பாணம் நீதிபதி இ.த.விக்னராசா தெரிவித்த கருத்துக்களையும் எச்சரிக்கையையும் எல்லோரும் கவனத்தில் கொள்வது முக்கியம் - அவசியம்.

பாடசாலை செல்லும் மாணவன் கல்வியை மட்டும் கற்றால் போதாது. ஒழுக்கம், பண்பாடு யாவற்றையும் கற்கவேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் செலுத்தும் ஆர்வத்தைப் போலவே அவர்களின் ஒழுக்கததிலும் அக்கறை காட்ட வேண்டும் -

மாணவர்களின் செயற்பாடுகள் எல்லை மீறிப் போனால் அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள். சட்டம் தனது வேலைகளைச் செய்யும் - என்று அவர் தெரிவித்தார்.

இன்றைய இளைய சமுதாயத்தினர் ஒழுக்கம் குன்றியவர்களாக உள்ளனர் என்பதனை விடவும் அடாவடித் தனம் மிகுந்தவர்களாகக் காணப்படுகின்றனர் என்பது கவலைக்குரியது. இது விடயத்தில் கவலைப்படுவதோடு நின்றுவிட முடியாது. காரணம் அவர்கள் எங்கள் பிள்ளைகள். குடாநாட்டின் வருங்காலச் சமூகத்தினர்.

அவர்களைக் கண்டித்தும் தண்டித்தும் பெரிதான மாற்றத்தைக் கொண்டு வருவது இலகுவானதல்ல. அவர்களுக்குப் புத்திமதி கூறி நல்வழி காட்டுவதில் இன்றைய சமூகத்தினர் அதிக அக்கறை கொள்ள வேண்டும். அவர்களை வெறுப்புடன் பார்க்காது அரவணைத்து நல்லொழுக்கத்தைப் புகட்டவேண்டும்.

தமது பிள்ளைகள் சாதாரண தரப் பரீட்சையிலும், உயர்தரப் பரீட்சையிலும் எத்தனை ஏ, டி தரச் சித்திகளைப் பெறுகின்றார்கள் என்பதில் குடாநாட்டுப் பெற்றோர்கள் அதீத அக்கறை காட்டுகிறார்கள். அதற்காகத் தமது நேரத்தையும், பணத்தையும், ஆற்றலையும் அளவின்றிச் செலவிடுகிறார்கள்.

குடாநாட்டுச் சமுதாயம் சந்ததி சந்ததியாகக் கல்வியில் அக்கறை காட்டி வருகிறது. கல்வி எங்கள் முதன்மையான சொத்து. ஆனால் ஒழுக்கம் இல்லாத கல்வியால் சீரழிந்த சமூகமே உருவாகும். அதுவே இப்போது அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

கல்வியில் செலுத்தும் அதே அளவு அக்கறையையும் ஆர்வத்தையும் இளவயதினரிடம் நல்லொழுக்கத்தை வளர்ப்பதிலும் காட்ட வேண்டும். இதில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், மதகுருமார்களின் பங்கு மிகப்பெரியது. சமூகத்தின் ஏனைய தரப்பினர்களுக்கும் இளையோரின் ஒழுக்கத்தை வளர்ப்பதில் பங்கு உணடு.

இன்றைய இளைஞர்களின் மன நிலையைப் புரிந்துகொண்டு அவர்களை நல்வழிப்படுத்துவதற்குக் கடும் உழைப்பும், சகிப்புத்தன்மையும் மூத்தோர்களுக்கு அவசியம் தேவைப்படுகின்றன.

எந்த ஒரு மனிதனினதும் நடத்தைக்கு, செயற்பாட்டுக்கு - அவற்றை வகுக்கும் குணங்களுக்கு - அவனது மனமே காரணம். இப்போதைய இளம் சந்ததியின் ஒழுக்கக்கேட்டை திருத்துவதானால் அவர்களின் மனங்களைத் திருத்த வேண்டும். தாம் பிழையான வழியில் செல்கிறார்கள் அது ஆபத்தானது, என்பதனை அவர்களுக்கு உணர வைக்கவேண்டும்.

எதிர்பார்க்கப்படும் மனத்திருத்தத்தை - மனமாற்றத்தை - கொணடு வருவதற்கு பாடசாலைகளில் ஒரு பாட நேரத்தையேனும் ஒதுக்குவது அவசியம். தீய ஒழுக்கத்தால் - பணிவின்மையினால், பிறரை மதித்து நடக்காததால், அவர்களுக்கு தொல்லை கொடுப்பதால், உணர்ச்சிவசப்பட்டு கோபமுற்று அடிதடியில் இறங்குவதால், உண்டாகும் விளைவுகளை அவர்கள் உணரத்தக்கதாக எடுத்துரைக்க வேண்டும். நற்பழக்கங்களால் அவர்களும் சமுதாயம் எவ்வாறு சீர்பெறும் என்பதனையும் விளக்க வேண்டும்.

வீடுகளில், பாடசாலைகளில், சங்கங்களில் இளசுகளுக்கு இத்தகைய மனப்பக்குவப் போதனைகள் நடத்துவதால் பெரும் பயன் விளையும். இதற்கான ஆலோசனை நிலையங்களையும் விசேடமாக உருவாக்கலாம். இவர்கள் எமது பிள்ளைகள் என்ற பாசத்தோடு, அவர்கள் இனியும் கெட்டுவிடாமல் தடுப்பது இன்றைய அவசரத் தேவை.

# அரசின் நிலைப்பாட்டைப் புலிகள் ஏற்றால் பேச்சுத் திகதி அறிவிக்கப்படும்

## அமைச்சர் ஜயரத்ன கூறுகிறார்

புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்துவது தொடர்பான அரசின் நிலைபபாட்டில் மாற்றம் இல்லை. அரசின் நிலைப்பாட்டை புலிகள் இயக்கம் ஏற்றுக்கொண்டால் பேச்சுவார்த்தைக்கான திகதியை அறிவிக்க அரசு தயாராக உள்ளது என்று காணி, விவசாய அமைச்சர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பேச்சு ஆரம்பித்த பின்னர் யுத்த நிறுத்தம் மற்றும் புலிகள் மீதான தடையை நீக்குதல் என்பன பற்றி பேசலாம் என்பதே அரசின் நிலைப்பாடு. அரசின் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை.

இலங்கை வந்துள்ள நோர்வே வெளிநாட்டு அமைச்சர் தடை நீக்கம தொடர்பான கோரிக்கைக்கு மாற்று யோசனையுடன் வந்திருப்பார் என்று நம்புகிறேன். பேச்சுவார்த்தை கூடிய விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் அரசு அக்கறை கொண்டுள்ளது.

பேச்சுக்காக புலிகள் மீதான தடையை நீக்கினால் அரசு பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அமைச்சர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார். (ம)

## நாட்டு நடப்பு

### 'ரமில் டே' - III
### உயர்ந்தது தமிழர் சாதி

சீர் கெட்டு மதுவில் ஊறி
சீரழிந்தது உலக சாதி
கார் குழலாரோடு கூடி
கண்டதை உண்டு உறங்கி
பாரினில் கொடிய எயிட்ஸைப்
பரப்பியது உலக சாதி
ஆரடா தமிழ்ச் சாதிக்கு
அருகினில் நிற்க வல்லார்?

*- விகடகவி -*

# குடாநாட்டில் விளையும் மரக்கறிகளை வாங்குவதற்கு இராணுவத்தினர் விருப்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்10

இராணுவத்தினருக்குத் தேவையான மரக்கறி வகைகள் மற்றும் இறைச்சி வகைகளைக் குடாநாட்டிலேயே கொள்வனவு செய்வதற்குப் பலாலி படைத் தலைமையகம் முடிவு செய்துள்ளது.

குடாநாட்டில் விளையும் மரக்கறி வகைகள், போதிய சந்தை வாய்ப்பில்லாமல் இருப்பதனைக் கருத்திற் கொண்டும், கொழும்பிலிருந்து கொண்டுவரும் மரக்கறி வகைகளுக்கான கட்டணம் அதிகரித்துள்ளதாலும் படை அதிகாரிகள் இந்த முடிவுக்கு வந்திருப்பதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் பயிர் செய்யப் படும் மரக்கறி வகைகள் எல்லாவற்றையும், கோழி, முட்டை, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, மீன் வகைகள் ஆகியன[...]ணுவத்தினர் குடாநாட்டிலேயே கொள்வனவு செய்ய உள்ளனர்.

இவற்றை விநியோகிக்க விரும்புவோர், யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்துடன் தொடர்புகொள்ளலாம். (அ)

## மலர் வெளியீடு

இலங்கையில் வெளியாகும் ஒரேயொரு கத்தோலிக்க தமிழ்ப் பத்திரிகையான 'பாதுகாவலனின்' 125 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட உள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதி இந்த நூல் வெளியீட்டு விழா நடைபெற உள்ளதாக 'பாதுகாவலன்' பத்திரிகையின் ஆசிரியர் அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை தெரிவித்தார். (ஐ-6)

## சடலத்துக்கு அருகே புலிகளின் துண்டுப்பிரசுரம்

திருகோணமலை,ஜூன்10

திருகோணமலை செல்வநாயகபுரம் பகுதியில் இருந்து கடந்த வியாழனன்று துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட சடலத்துக்கு அருகில் "துரோகிக்கு மரண தண்டனை" என்ற தலைப்பிலான - விடுதலைப் புலிகளின் சின்னத்துடன் கூடிய - துண்டுப்பிரசுரம் ஒன்று காணப்பட்டதாகத் திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

மேற்படி சடலம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் பிறேமச்சந்திரன் என்பவருடையது என்றும் -

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினரான இவர், அந்த அமைப்பை விட்டு விலகியபின்னர் சில குற்றச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டிருந்தார் எனக் கூறப்பட்டது.(உ-7)

## வெள்ளி தோறும் வழிபட அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூன்10

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் வள்ளாய் விநாயகர் ஆலயத்துக்கு நேற்று முன்தினம் முதல் பிரதி வெள்ளி தோறும் பக்தர்கள் சென்று வழிபாடுகளை நிகழ்த்துவதற்குப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனை அடுத்து நேற்று முன்தினம் மேற்படி ஆலயத்துக்குச் சென்ற மக்கள் பூசை வழிபாடுகளை நிகழ்த்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நீண்டகாலமாகப் பொதுமக்கள் விடுத்து வந்த வேண்டுகோளை அடுத்தே படையினர் இந்த அனுமதியை வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-7-15)

## இளைஞன் கைது

வவுனியா,ஜூன்10

வவுனியா குருமண்காடு பகுதியில் கடை ஒன்றில் பணிபுரியும் இளைஞர் ஒருவர் கடந்த வியாழன்று படையினரால் கண்கள் கட்டப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்.

சிவபாலன் பாலமுரளி (வயது21) என்பவரே இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (உ-3)

## நாளை

வைகாசி 28
திங்கட்கிழமை
திதி: பஞ்சமி
பிற்பகல் 2.15 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
காலை 7.51 வரை.
சுபநேரம் : 11.52 - 1.22
ராகுகாலம் : 7.22 - 8.52
(பழைய நேரப்படி)

# அறமும் இன்பமும் தரும் பொருள் பற்றி இலக்கியத் தலைவியின் கருத்து என்ன?

பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பார்கள். பொருட் செல்வம் பற்றி பல பாடங்கள் நம் தமிழ் மொழியில் உள்ளன. பொருள் இல்லாதவனது பரிதாப நிலைமையை ஔவையார் நல்வழியில் இவ்வாறு கூறுகிறார்.

*கல்லானே யானாலும் கைப்*
*பொருள் ஒன்றுண்டாயின்*
*எல்லோரும் சென்றங்கெதிர் கொள்*
*வர் - இல்லானை*
*இல்லாளும் வேண்டாள் மற்றீன்*
*றெடுத்த தாய் வேண்டாள்*
*செல்லாதவன் வாயிற் சொல்.*

அதாவது கல்வி கற்காத மூடனேயாயினும் அவனிடம் பொருள் செல்வம் இருந்துவிடிலோ அவனுக்கு எங்கு சென்றாலும் வரவேற்புண்டாம். பொருள் இல்லாதவன் பெருங் கல்விமானேயானாலும் அவனை எவரும் கவனிக்கமாட்டார்கள். கட்டிய மனைவி கூட வேண்டாம் இவனை என்று கூறுவள். அது மட்டுமா அன்பு பாராட்டி வளர்த்த தாய் கூட வரவேற்கமாட்டாள். அவனுடைய பொருள் பொதிந்த வார்த்தைகள் கூட எல்லோராலும் புறக்கணிக்கப்படும்.

எவ்வளவு பணம் கொடுத்தாலும், அன்பைச் சொரிந்தாலும் திருப்திப்படாத மனைவியர் ஔவையார் காலத்திலேயே இருந்திருக்கின்றனர். வீட்டிற்கு வரும் கணவனுடைய நண்பர்களை விருந்தினர் என்றும் பாராமல் விரட்டும் மனைவியரை "இருந்து முகந் திருத்தி..." என்ற ஔவையாரின் பாடல் மூலம் அறிகிறோம்.

பழந்தமிழ் நாட்டில் பொருளுக்கு எப்படி மதிப்பிருந்தது? கலித்தொகையில் வரும் ஒரு கணவன் மனைவி உரையாடல் மூலம் அதனைப் பார்க்கலாம். பாலை பிரிவுக்குரியது. பொருள்வயின் பிரிவு, போர்வயின்

### இலக்கியச்சோலை

பிரிவு, தூதுக்காகப் பிரிவு என்று பிரிவுகள் எத்தனையோ வகை.

பொருள் தேட வெளியூர் செல்ல வேண்டும் என்று அடிக்கடி கூறிக் கொண்டிருக்கிறான் கணவன் பொருள் பொருள் என்று அடிக்கடி கூறிக் கொண்டிருப்பதைச் சகிக்க முடியாத மனைவி. "பொருள் பொருள் என்று கூறிக் கொண்டிருக்கிறீர்களே. அவ்வூரில் என்ன தெருவில் பொருள் கொட்டியா கிடக்கிறது? அள்ளிவர. பொருள் திரட்டிவர நாள் கணக்கில் அல்ல மாதக் கணக்கில் அல்லவா காத்திருக்க வேண்டும். அவ்வளவு காலம் உங்களால் என்னை மறந்திருக்க முடியுமா? அல்லது என்னாற்தான் உங்களை மறந்திருக்க முடியுமா?

### உதங்கா

எங்கு சென்றாலும் என் நினைவுடன் இருக்கும் நீங்கள் ஒழுங்காகப் பொருள் திரட்டவும் முடியாமல் பாதியிலே ஓடி வருவீர்கள். வெறுங்கையோடு வரும் உங்களை உலகோர் கேலி செய்யமாட்டார்களா? ஊரில் உள்ள அனைவரும் பொருள் தேட என்று புறப்பட்டா நிற்கிறார்கள். வெளியூர் சென்று பொருள் தேடாதோர் பட்டினியா கிடக்கிறார்கள். காதலைவிடப் பெரிய பொருள் என்ன கிடக்கிறது. அன்பைவிட அழியாத செல்வம் எது? இருவருக்கும் பெருஞ்செல்வம் இளமை. எனவே ஒரே ஆடை உடையவராகிலும் அதனை உடுத்தி மகிழ்வதைவிடப் பேரின்பம் ஏது? எனக்காக நீங்கள் உங்களுக்காக நான் என்னும் பெருஞ்செல்வம் உள்ளபோது ஏன் வெளியூர் செல்லவேண்டும்? போவானா அவன்?

*அரும்பொருள் வேட்கையின்*
*உள்ளம் துரப்ப*
*பிரிந்து உறை சூழாதி ஐயா!*
*விரும்பி நீ*
*என் தோள் எழுதிய தொய்யிலும்*
*யாழ நின்*
*மைந்துடை மார்பில் சுணங்கும்,*
*நினைத்துக் காண்*
*சென்றோர் முகப்பப் பொருளும்*
*கிடையாது.*
*ஒழிந்தவர் எல்லோரும் உண்ணா*
*தும் செல்லார்*
*இளமையும் காமமும் ஓராங்குப்*
*பெற்றார்*
*வளமை விழைத்தக்கது உண்டோ*
*உள நாள்*
*ஒரோ ஒகை தம்முள் தழிக,*
*ஒரோ ஒகை*
*ஒன்றன் கூறு ஆடை உடுப்பவரே*
*ஆயினும்*
*ஒன்றினார் வாழ்க்கையே*
*வாழ்க்கை, அரிது அரோ*
*சென்ற இளமை தரற்கு!*

## இரு கான்ஸ்டபிள்கள் உயிரிழப்பு

கொழும்பு,ஜூன்9

வாழைச்சேனைக்கு தெற்கே கறுவங்கேணியில் அமைந்துள்ள பொலீஸ் சோதனை நிலையம் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார்த் தாக்குதலில் ஊர்காவலர் ஒருவர் காயமடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.


அதே தினம் காலை 10 மணியளவில் ஏறாவூர் நகரில் பிஸ்ரல் குழு மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிளும் -

அதே தினம் காலை சம்மாந்துறையில் பிஸ்ரல் குழு மேற்கொண்ட தாக்குதலில் மற்றொரு றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிளும் - உயிரிழந்ததாகவும் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (உ-3)

## உதயவாக்கு

சிறுவர்களுக்கான ஆரம்பக் கல்வி அறிவூட்டுவதன்று நல்ல பழக்கவழக்கங்களை கைக்கொள்ளச் செய்வதாகும்.

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# காணாமற்போன கைதான ஆசிரியர், மாணவர் விவரம்

## தமிழர் ஆசிரியர் சங்கம் திரட்டுகிறது

திருகோணமலை ஜூன் 10

வடக்கு, கிழக்கில் காணாமற்போன மற்றும் கைது செய்யப்பட்ட ஆசிரியர். மாணவர்களின் பெயர்களையும் இராணுவ முகாம்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் அமைந்துள்ள பாடசாலைகள் பற்றிய விவரங்களையும் திரட்டுவதில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஈடுபட்டுள்ளது.

பாடசாலை வளவினுள் அல்லது பாடசாலைச் சூழலில் உள்ள இராணுவ முகாம்கள் அல்லது சோதனைச் சாவடிகள் பற்றிய விவரங்களைத் திரட்டி உடனடியாக அனுப்பி வைக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் சகல கிளைச் செயலாளர்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பாடசாலை வளவினுள் மற்றும் சூழலில் இராணுவ முகாம்கள், சோதனைச் சாவடிகள் இருப்பது, கற்றல் கற்பித்தலுக்கு ஆரோக்கியமான சூழ்நிலையை ஏற்படுத்தாது என்றும், அவற்றை உடனடியாக அகற்ற வேண்டும் என்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு அண்மையில் கல்வி அமைச்சரைக் கொழும்பில் சந்தித்த போது கேட்டுக் கொண்டது.

அப்போது இது பற்றிய சகல விவரங்களையும் தரும்படி சங்கத்தை அமைச்சர் கோரியிருந்தார்.

தமிழர் அல்லாத அதிபர்களைக் கொண்ட தமிழ்ப் பாடசாலையின் விவரங்களையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் திரட்டுகிறது. தமிழ்ப் பாடசாலைகள் அனைத்திலும் தமிழர் அதிபர்களாகநியமிக்கப்பட வேண்டும். என்ற கோரிக்கைகளை அமைச்சர் ஏற்றுக்கொண்டு, அது பற்றிய விவரங்களைத் தரும்படியும் கோரியதையடுத்தே இவ் விவரங்களை சங்கம் திரட்டி வருவதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் மகாசிவம் தெரிவித்தார். (உ)

## ஆங்கில தின போட்டிகள் ஒத்திவைப்பு

வலிகாமம் தெற்கு, ஜூன் 10

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நாளையும் நாளை மறுதினமும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற இருந்த ஆங்கில தினப்போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாளை நடைபெற இருந்த போட்டிகள் யாவும் இம் மாதம் 18ஆம் திகதியன்றும். 12 ஆம் திகதி நடைபெற இருந்த போட்டிகள் யாவும்—இம் மாதம் 20 ஆம் திகதியன்றும்—

உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறும். (ஐ–152)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 10

நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை பங்குச் சிறார்களுக்கு முதன் நன்மை அளிக்கும் நிகழ்வு இடம் பெறும். நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நற்கருணை வழிபாடும் 13 ஆம் திகதி புதன்கிழமை புனிதரின் திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும்.

நெடுந்தீவு பங்குத் தந்தை பூசைகளை நடத்தி வருகின்றார். (ஐ - 7)

★ ★ ★

உடுவில் பெரிய குளத்தடி நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல்நடைபெற உள்ளது. (ஐ-152)

★ ★ ★

கொக்குவில் தலையாளி ஞானவைரவர் ஆலய மஹா கும்பாபிஷேக தினத்தை ஒட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை விசேட அபிசேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

நண்பகல் ஆலயத்தில் அன்னதானமும் இடம்பெறும். (ஐ - 7 - 86)

★ ★ ★

மாதகல் சகாயபுரம் புனித சகாய மாதா ஆலயத்தின் 20 ஆவது வருடாந்தத் திருவிழா இன்று காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம் பெறும். திருப்பலிகளை இளவாலை பங்குத் தந்தை அருள்திரு. சி. ஜே. அன்ரனி பாலா அடிகளார் நிறைவேற்றுவார். (ஐ-7–135)

வலி. தென் மேற்கு இந்து ஆலயங்களின் மகா சபை விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ஐ-74)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய மஹாகும்பாபிஷேக தின விழா (மணவாளக் கோல விழா) இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. ( ஐ - 7 – 4 )

★ ★ ★

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இப்பெருவிழா நவநாள்கள் நடைபெற்று எதிர்வரும் 16ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு நற்கருணை ஆராதனை இடம்பெறும். 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் ஆசீர் வழங்கலும் இடம்பெறும். (உ-100)

★ ★ ★

வண்ணை, காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாணர்விக்கினேஸ்வரப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ம-10)

## விளையாட்டு நிகழ்வுகள்

ஊர்காவற்றுறை, ஜூன் 10

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் யாழ். மாவட்டத்தில் உள்ள இளைஞர் கழகங்களின் சம்மேளனங்களுக்கிடையே நடத்தப்படும் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். பகலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் சி. சிவதட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபைத் தலைவருமான க. மணிபல்லவராஜன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ம-16)

★ ★ ★

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின்அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

உடுவில் சிந்து விளையாட்டுக்கழக அணி எதிர் இணுவில் உதய சூரியன் விளையாட்டுக்கழக அணி (ம-86)

★ ★ ★

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கட் சங்கத்தினால் யாழ். மாவட்ட பாடசாலைகள் இடையே நடத்தப்படும் 15 மற்றும் 17 வயதுப் பிரிவுகளுக்கிடையேயான கிரிக்கட் சுற்றுப்போட்டிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

### 15 வயதுப் பிரிவு

★ சுழிபுரம்விக்டோறியாக் கல்லூரி அணி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி (விக்டோரியாக்கல்லூரி மைதானம்)

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி எதிர் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி (மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம்)

### 17 வயதுப் பிரிவு

★ கொக்குவில் இந்துக் கல்லூரி அணி எதிர் யாழ். மத்திய கல்லூரி அணி(கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்)

★ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி (யாழ். இந்து மைதானம்) (ம–86)

## 542 பொதிகளில் தபால்கள்வந்தன

கடந்த வியாழக்கிழமை காங்கேசன்துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடா நாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 542 தபாற் பொதிகள் எடுத்துவரப்பட்டன. (ஐ–7-10)

### விமான நிலையத்தில்

# மதுப் போத்தல்களுடன் பாடசாலை மாணவிகள்!

## மாகாண அமைச்சர் விசனம் தெரிவிப்பு

கண்டி, ஜூன் 10

கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கண்டியைச் சேர்ந்த பிரபல மகளிர் பாடசாலை ஒன்றின் மாணவிகள் தங்களது கைகளில் ஆளுக்கு இவ்விரண்டு விஸ்கி மதுபான போத்தல்களை ஏந்தி நின்ற காட்சி குறித்து மத்திய மாகாண சுகாதார அமைச்சர் திலின தென்னக்கோன் மாகாண சபையில் மிகுந்த வேதனையுடன் தனது அதிருப்தியையும் கவலையையும் தெரிவித்தார்.

மத்திய மாகாண சபைக் கூட்டம் பல்லேகல மாகாண சபை மண்டபத்தில் மகிந்த அபயகோன் தலைமையில் கடந்த வியாழனன்று நடைபெற்றது. அங்கு அமைச்சர் திலின தென்னக்கோன் தொடர்ந்தும் கூறியதாவது:-

நான் அண்மையில் வெளிநாடு செல்வதற்காக சர்வதேச விமான நிலையம் சென்றேன். அங்கு பாடசாலை மாணவர்களும் விளையாட்டு என்ற போர்வையில் நடந்து கொள்ளும் முறை கண்டு மிக்க வேதனைப்பட்டேன்.

அங்கு குழுமியிருந்த பாடசாலை மாணவிகள் சிலரைக் கண்டேன். அவர்கள் கண்டியைச் சேர்ந்த பிரபல மகளிர் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவியர் அவர்கள் கைகளில் போதை தரும் விஸ்கி போத்தல்கள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன்.

இத்தகைய ஏற்பாடுகளுக்குப் பின்னால் இருப்பவர்களின் நடத்தையினால் அப்பாவி பாடசாலை மாணவர்கள் பலியாக்கப்படுகின்றனர். இத்தகைய ஒரு துர்ப்பாக்கிய நிலை குறித்து நான் மிகுந்த வேதனைப்படுகிறேன். மத்திய மாகாண முதலமைச்சர் இந்தச் சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை மேற்கொள்ளவேண்டும்—என்றார். (உ)

### அரசுக்கு எதிரான

# நம்பிக்கையில்லாப் பிரேரணை: மிக விரைவில் முன்னறிவித்தல்!

கொழும்பு, ஜூன் 10

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்காக தனது கட்சியைச் சேர்ந்த 60 எம். பிக்களின் கையொப்பங்களை பிரதான எதிர்க் கட்சியான ஐ- தே. கட்சி பெற்றுள்ளது.

அடுத்த வாரம் இது தொடர்பான பிரேரணை முன்னறிவித்தல் நாடாளுமன்றத்தில் கையளிக்கப்படும் என ஐ. தே. கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்படும் போது ஜே. வி. பி., தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஆதரவு வழங்கும் என ஐ.தே.க. நம்பிக்கை கொண்டுள்ளது.

அரசுத் தரப்பில் உள்ள உறுப்பினர்கள் சிலரும் பிரேரணையை ஆதரித்து வாக்களிப்பார்கள் என ஐ.தே.க. எதிர்பார்க்கிறது, (உ)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 10

நல்லூர் ஆடியபாதம் வீதி, முத்தமிழ் பாலர் பாடசாலையின் 10 ஆவது ஆண்டு விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு பாடசாலைப் பொறுப்பாசிரியை செல்வி ச. சியாமளாதேவி தலைமையில் கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி கலந்து கொள்வார். (ஐ)

★ ★ ★

ஜூப்பிற்றர் பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று நண்பகல் 1 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மைதானத்தில் கழகத் தலைவர் பா. சிறீபவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் கலந்துகொள்ள உள்ளார். (ம–9)

## வீடியோ கசற் ஏற்கும் பணி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். பிரதம தபாலகத்தில் வெளியிடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான வீடியோ நாடாக்களை ஏற்கும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பிரதம தபாலதிபர் சி. மார்க்கண்டன் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே பெறப்பட்டுள்ள நாடாக்களை அனுப்பி வைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே புதிதாக நாடாக்களை ஏற்கும் பணி மீண்டும் ஆரம்பமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்– ( ஐ– 7 – 10)

# மத்திய கல்லூரி மாணவர்களுக்கு இலவசப் பாடநூல்கள் போதா!

## அதிபர் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கான இலவசப் பாட நூல்களில் 35 சதவீதப் பாடப் புத்தகங்களே இதுவரை வழங்கப்பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் விசனம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தரம் 8, 11, 3 ஆகிய வகுப்புகளுக்குப் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட பாடநூல்கள் போதியளவு வழங்கப்படவில்லை என்றும்–

இரண்டாம் தவணை ஆரம்பமாகி ஒருமாதம் முடிவடைந்தும் இதுவரை பாட நூல்கள் வழங்கப்படாமை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதாகவும் —

அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான 95 சதவீதமான பாடநூல்கள் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்துள்ளதாகக் கல்வி அதிகாரிகள் தெரிவித்தபோதிலும், பல பாடசாலைகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் முழுமையாக விநியோகிக்கப்படவில்லை என்றும் மத்திய கல்லூரி அதிபர் தெரிவித்தார். (ஐ-7)



ஜப்பானியப் பாடசாலையில் வெறிபிடித்த நபரிடமிருந்து தப்பிய சிறுவர்கள், ஒருவரை ஒருவர் தேற்றும் காட்சி.

## மனநோயாளியின் வெறித்தாக்குதல்;
# ஜப்பானியப் பாடசாலையில் 8 பாலகர் துடிதுடித்துப் பலி!

டோக்கியோ,ஜூன்10

**ஜப்பானில் சிறுவர் பாடசாலை ஒன்றினுள் நேற்றுமுன்தினம் புகுந்த நபர் ஒருவர் அங்கிருந்தவர்களை கண்மூடித்தனமாகக் கத்தியால் குத்தியதில், 6-8 வயதுக்குட்பட்ட 8 பாலகர்கள் துடிதுடித்து இறந்தனர்.**

ஒசாக்கா நகரில் உள்ள 'இகெடா' சிறுவர் ஆரம்பப் பாடசாலை ஒன்றில் நெஞ்சம் பதை பதைக்கும் இந்தக் கொடூரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை பாடசாலை ஆரம்பித்த சிறிது நேரம் கழித்து, நுழைந்த 37 வயது மதிக கத்தக்க நபர் ஒருவர் தன்னிடமிருந்த 15 சென்ரி மீற்றர் (6 அங்குலம்) நீளமான கத்தியினால் முதலில் ஆசிரியர் ஒருவரைக் குத்தியுள்ளார். அதில் ஆசிரியர் பேச்சு மூச்சற்று விழவே, கையில் அகப்பட்ட சிறுவர்களை அந்த நபர் கத்தியால் குத்தியுள்ளார்.



கத்திக் குத்துக்கு இலக்கான மாணவி ஒருத்திக்கு வீதியில் வைத்து முதலுதவி.

இந்தத் தாக்குதலில் இறந்தவர்கள் ஆறு முதல் எட்டு வயதுக்குட்பட்ட மாணவிகளாவர். மேலும் காயமடைந்த 20 சிறுவரும், ஆசிரியர்கள் சிலரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒரு சிறுமியும், ஆசிரியர் ஒருவரும் ஆபத்தமான நிலையில் உள்ளனர்.

கத்தியுடன் வெறியாட்டம் ஆடிய நபர் இறுதியில் இரு ஆசிரியர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலீஸில் ஒப்படைக்கப்பட்டார்.

1999 ஆம் ஆண்டு, பாடசாலை ஒன்றில் பணியாற்றிய இந்தநபர், ஆசிரியர்கள் சிலருக்கு தேநீரில் போதை வஸ்துவைக் கலந்து கொடுத்ததற்காக கைதானதாகவும் -

பின்னர் விடுதலையான இவர் பலமுறை தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டதாகவும் -

தற்போது மனநோயாளியான அந்த நபர், விரக்தியடைந்த நிலையில் இந்தக் கொடூரத் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் -

விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஜப்பானில் மனவிரக்தியினால் நோக்கமின்றி, அடுத்தவரைத் தாக்கும் சம்பவங்கள் சமீபகாலமாக அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-4-7)



கொடூரமான சம்பவத்தின் பின்னர், ஆபத்திலிருந்து தப்பிய தமது குழந்தைகளை, இழுத்தபடி வீடுகளுக்கு விரையும் பெற்றோர்.

## தொழிற்கட்சி வெற்றியால் பிரிட்டிஷ் தமிழர் நம்பிக்கை

பிரிட்டனில், தாம் ஆதரித்த தொழிற்கட்சியே மீண்டும் ஆட்சிக்கு வந்திருப்பதால், இலங்கை இனப்பிரச்சினைக்கு நீதியான சமாதானத் தீர்வு காண வழி ஏற்படும் என்று பிரிட்டிஷ் தமிழ் அரசியல் அமைப்புகள் நேற்று முன்தினம் நம்பிக்கை வெளியிட்டன.

கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற பிரிட்டிஷ் பொதுத் தேர்தலின் போது பிரதமர் ரொனி பிளயர் தலைமையிலான தொழிற்கட்சியை ஆதரிப்பதென அங்குள்ள தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பு தெரிவித்திருந்தது. அத்துடன் இலங்கை இனப்பிரச்சினைக்கு நீதியான சமாதானத் தீர்வு ஏற்பட தொழிற்கட்சி மீண்டும் பதவிக்கு வந்தாலும் ஆவன செய்யவேண்டும் என்றும், இக்கூட்டமைப்பு கோரியிருந்தது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் மொத்தமுள்ள 659 இடங்களில் தொழிற்கட்சி 413 ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியுள்ளது.

அத்துடன் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில், ஆசிய வம்சாவழியினரின் பிரதிநிதித்துவம் 7 ஆக உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்றை ஏற்படுத்த பிரிட்டிஷ் அரசு அதிக அழுத்தம் கொடுக்கும் வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பதாக பிரிட்டிஷ் தமிழ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

## சட்டவிரோத ஆயுதவிற்பனை:
## முன்னாள் அதிபர் மெனம் ஆர்ஜென்ரீனாவில் கைது!

புவனர்ஸ்அயர்ஸ்,ஜூன்10

சட்டவிரோத ஆயுத விற்பனை தொடர்பாக ஆர்ஜென்ரீனாவின் முன்னாள் ஜனாதிபதி கார்லோஸ் மெனம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரது ஆட்சிக்காலத்தில் குரோசியாவுக்கும் ஈக்குவடோருக்கும் பல லட்சம் ரூபா பெறுமதியான ஆயுதங்கள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டது சம்பந்தமாகவே அவர் கைதானார்.

70 வயதாகும் மெனம், நீதிமன்ற உத்தரவுப்படி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஒரு நாடு வாங்கும் ஆயுதங்கள், அந்த நாட்டினாலேயே உபயோகப்படுத்தப்பட வேண்டும், அல்லது அழிக்கப்படவேண்டும். வாங்கிய ஆயுதங்களை வேறு நாடுகளுக்கோ அல்லது அமைப்புகளுக்கோ விற்பது சர்வதேச விதிகளின்படி சட்டவிரோதமாகும்.

ஆனால் வாங்கிய ஆயுதங்களை சர்வதேச விதிகளை மீறி உள்நாட்டுப் போர் இடம்பெறும் வேறு நாடுகளுக்கு விற்றதாக மெனம் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

தன் மீது தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளை மறுத்த மெனம் நீதியின் மீது நம்பிக்கை வைத்துள்ளதாகக் கூறியுள்ளார். (ஒ)

## கோரிக்கையை நிறைவேற்றாவிடில் பணயக்கைதிகள் தலை துண்டிப்பு
### பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகள் மிரட்டல்!

மணிலா,ஜூன்10

மலேசிய முன்னாள் செனட்டர் சைதின் கார்லேஸாவை மத்தியஸ்தராகக் கொண்டு பிலிபைன்ஸ் அரசு தம்முடன் பேச்சு நடத்த முன்வராவிட்டால், தம்மிடம் பணயக் கைதிகளாக உள்ள 3 அமெரிக்கர்களின் தலைகளையும் துண்டிக்கப்போவதாக 'அபுசெயப்' தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர். தமது கோரிக்கைக்கு சம்மதிக்க பிலிப்பைன்ஸ் அரசுக்கு அவர்கள் இன்று நண்பகல் வரை அவகாசம் வழங்கியுள்ளனர்.

உலக அரங்கில்

கிறிஸ்தவ மிஷனரியைச் சேர்ந்த இருவர் உட்பட 3 அமெரிக்கர்கள் 'அபுசெயப்' தீவிரவாதிகளிடம் பணயக் கைதிகளாக உள்ளனர். தற்போது இவர்களுடன் சேர்த்து மொத்தம் 50 பேர் பணயக் கைதிகளாகச் சிக்கியுள்ளனர்.

தற்போது அரசுதரப்பு மத்தியஸ்தராகச் செயற்படும் வில்லியம் கண்டிலோவுடனான பேச்சுக்கள் பலனளிக்கப் போவதில்லை என்றும -

பேச்சுக் குறித்த தமது கோரிக்கையை நிறைவேற்ற பிலிப்பைன்ஸ் அரசுக்கு 72 மணி நேரக் கால அவகாசம் வழங்குவதாகவும் -

கடந்த வியாழக்கிழமை நண்பகல 'அபசாயப்' தீவிரவாதிகள் பகிரங்க அறிவிப்பு வெளியிட்டிருந்தனர்.

எனினும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குளோரியா அரோயா தீவிரவாதிகளின் கோரிக்கையை நேற்றுமுன்தினம் நிராகரித்துள்ளார்.

இதேவேளை, பிரிவினை கோரும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான 'அபுசாயப்' அமைப்பின் மீது தொடர்ந்து கடும் போக்கைக் கடைப்பிடிக்கப் போவதாக பிலிப்பைன்ஸ் இராணுவம் தெரிவித்தது.

இந்த நிலையில் தீவிரவாதிகளிடம் சிக்கியுள்ளவர்களின் நிலை குறித்து கவலை எழுந்துள்ளது.

இதற்கிடையில் -

தீவிரவாதிகளிடம் சிக்கியுள்ள அமெரிக்கர்களைப் பாதுகாப்பாக விடுவிக்க, அமெரிக்க அரசு மத்திய புலனாய்வு நிறுவன (சி.ஐ.ஏ) அதிகாரிகளைப் பிலிப்பைன்ஸுக்கு அனுப்பி வைத்துள்ளது. அனைத்துப் பணயக் கைதிகளையும் விடுவிக்கும்படியும் தீவிரவாதிகளிடம் அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ)

### பாண்டிச்சேரியில் புதிய சட்டசபை

புதுவை,ஜூன்10

பாண்டிச்சேரியில் 11ஆவது சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடர் நேற்றுத் தொடங்கியது.

புதிய உறுப்பினர்களுக்கு தற்காலிக சபாநாயகர் ஏ.வி.ஸ்ரீதரன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

முதலமைச்சர் ப.சண்முகம், சட்டப்பேரவை உறுப்பினர் ஆகாததால் அவர் நேற்றுப் பதவியேற்கவில்லை.

## ஈரானிய ஜனாதிபதி தேர்தலில் சீர்திருத்தவாதி கடாமி வெற்றி!


தெஹ்ரான்,ஜூன்10

ஈரானின் ஜனாதிபதியாகச் சீர்திருத்தவாதி மொஹமட் கடாமி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். உத்தியோகபூர்வ முடிவு வெளியாக சில நாள்கள் ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நான்காண்டுப் பதவிக்காலம் கொண்ட ஈரானிய அதிபர் பதவிக்கான தேர்தலின் வாக்குப்பதிவு கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்தத் தேர்தலில் சுமார் 87 சதவீத வாக்குகள் பெற்று, 57 வயதான, இஸ்லாமிய சமயத் துறவி கடாமி வெற்றி பெற்றார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட பழமைவாதியும், முன்னாள் தொழிற்றுறை அமைச்சருமான அஹமட் தவகோலி சுமார் 14 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றார்.



மொஹமட் கடாமி

ஈரானின் ஷா மன்னரை பதவியகற்றிய மதத்தலைவர் அயத்துல்லா கொமெய்னியின் மதப்புரட்சிக்குப் பின்னர், அங்கு சீர்திருத்தக் கொள்கையில் கூடுதல் ஈடுபாடு காட்டிவருபவர் கடாமி.

ஆயினும் அரசில் அங்கம் வகித்த இஸ்லாமியப் பழமை வாதிகள் கடாமியின் சீர்திருத்தக் கொள்கைகளை எதிர்த்து வந்தனர்.

கடாமிக்கு ஆதரவாகச் செய்தி வெளியிட்ட பத்திரிகைகள் மீது இஸ்லாமிய நீதிமன்றங்கள் கடும் போக்கைக் கடைப்பிடித்தன.

ஆனால் தற்போது கடாமிக்கு பெரும் வெற்றியை அளித்ததன் மூலம், ஈரானியர்கள் சீர்திருத்தக் கொள்கைகளுக்கான தமது ஆதரவைத் தெளிவாகத் தெரிவித்துள்ளனர். (ஒ)

## நேபாள அரச குடும்பப் படுகொலைகள்:
# புதிய மன்னரின் புதல்வர் பரஸால் பல பெண்கள் உயிர் தப்பினராம்
### நேபாளியர்கள் நம்ப மறுப்பு

நேபாள அரச குடும்பப் படுகொலைகள் நிகழ்ந்த சமயம் புதிய மன்னர் ஜியனேந்திராவின் புதல்வர் பரஸால் பல பெண்கள் காப்பாற்றப்பட்டனர்.

கொல்லப்பட்ட நேபாள மன்னர் பிரேந்திராவின் இளைய சகோதரர் திரேந்திராவின் மருமகனான ராஜிவ் சாஹி இவ்வாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"அளவுக்கதிகமாக மதுவருந்தி, நிற்கக்கூட முடியாத நிலையில் இருந்த பட்டத்து இளவரசர் திபேந்திராவே மன்னர், ராணி உட்பட அரச குடும்பத்தவர்களைச் சுட்டுக் கொன்றார். மன்னர் சுடப்பட்டதாக அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்தேன். அங்கு கழுத்திலும், வயிற்றிலும் சுடப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த மன்னர் பிரேந்திராவைக் கண்டு எனது மேலங்கியைக் கழற்றி காயங்களில் இருந்து இரத்தம் பெருகுவதைத் தடுக்க முயன்றேன்.

நான் மன்னரைக் காப்பாற்ற முயன்று கொண்டிருந்த போது, தோட்டத்திலிருந்து இளவரசர் திரும்பி வந்து எனது மாமனாரை (மன்னரின் தம்பி திரேந்திரா) மார்பில் சுட்டுக் கொன்றார். பின்னர் தோட்டப் பக்கம் சென்று அங்கு நின்றிருந்த ராணி ஐஸ்வர்யா மற்றும் இளவரசன் நிரஜன் ஆகியோரைச் சுட்டுக் கொன்றார்.

படுகொலைகள் யாவும் 90 நிமிடங்களில் முடிவடைந்தன. அதன் பின்னர் இளவரசர் தன்னைத் தானே சுட்டுக் கொண்டார்.

முன்னதாக ஒரு கட்டத்தில் இளவரசர் அரச குடும்பப் பெண்களை நோக்கி துப்பாக்கியை நீட்டிய போது, புதிய மன்னர் பராஸ் அவர்களுக்கு குறுக்கே வந்து மறித்தார். இல்லாவிட்டால் அப்பெண்களும் பலியாகி இருப்பார்கள்" என்று ராஜிவ் தெரிவித்தார்.

இதற்கிடையில் ராஜிவ் சாஹி கூறியிருப்பதில் பல முரண்பாடுகள் இருப்பதாகவும் பராஸ் மீது நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்த புனையப்பட்ட கதையே இது என்றும் - கருதும் நேபாளியர்கள் தொடர்ந்து புதிய மன்னர் மற்றும் பிரதமர் கொய்ராலா ஆகியோருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரண்மனைப் படுகொலைகள் குறித்து விசாரணைகள் நடத்தப்படும் இந்தவேளையில், ராஜிவ் சாஹி செய்தியாளர்களிடம் கொலைகள் தொடர்பாகப் பேசியிருப்பதற்குக் கடும கண்டனங்கள் எழுந்துள்ளன.

இது விசாரணையில் சாட்சியமளிப்பவர்களை வழிமாற்றும் செயல் என்று நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சி அதிருப்தி தெரிவித்துள்ளது. (ஒ)

## பிரிட்டிஷ் அமைச்சரவையை மாற்றியமைத்தார் பிரதமர் பிளயர்

லண்டன்,ஜூன்10



பிரிட்டிஷ் பிரதமராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரொனி பிளயர் தமது அமைச்சரவையில் பெரும் மாற்றங்களைச் செய்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் பிரிட்டனில் தடைசெய்யப்பட்ட போது உள்துறை அமைச்சராக பதவிவகித்த ஜக்ஸ்ரோ, வெளிநாட்டு அமைச்சராகவும் -

கல்வி அமைச்சராக இருந்த டேவிட் பிளாங்கெட் உள்துறை அமைச்சராகவும - நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னர் வெளிநாட்டு அமைச்சராகப் பதவி வகித்த ரொபின் குக்குக்கு 'கொமன்' சபையின் அவைமுன்னவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இது பதவி இறக்கம் என்று கருதப்படுகிறது.

பிளயரின் புதிய அமைச்சரவையில் சுற்றுச் சூழலுக்குத் தனி அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ)

### டிராக்டர் - ரயில் மோதல்; 6 பேர் மரணம்!

தமிழகத்தின் விழுப்புரத்தில் வீதியின் குறுக்கே இருந்த பாதுகாப்பற்ற தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட டிராக்டர் ஒன்றின் மீது ரயில் மோதியதில், டிராக்டரில் பயணம் செய்த 6 விவசாயத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்; 10 பேர் காயமடைந்தனர். (ஒ)

### நதி வெள்ளம் குறித்து சீனா - இந்தியா ஆலோசனை

பெய்ஜிங்,ஜூன்10

சீனாவில் ஆரம்பமாகி, இந்தியாவில் பாயும் பிரம்மபுத்ரா மற்றும் சட்லெஜ் ஆகிய நதிகளில் வெள்ளம் பெருகும் போது ஏற்படும் சேதங்களைச் சமாளிப்பது குறித்து இந்திய - சீன அதிகாரிகளின் கூட்டம் நேற்று பெய்ஜிங்கில் தொடங்கியது.

38 ஆண்டுகளில் இந்த விடயம் குறித்துப் பேச்சு நடப்பது இதுவே முதல் தடவையாகும். (ஒ-4-7)

உ
ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நம
ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை துணை

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் வைகாசி மாதம் 28 ஆம் திகதி நாளை (11-06-2001) திங்கட்கிழமை பகல் 11.53 முதல் 12.25 மணி வரை வரும் சிங்கலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| எமது புத்திரன் | | எமது புத்திரி |
|---|---|---|
| **இ.யோகேஸ்வரன்** |  | **வ.விஜிதா** |
| **(அப்பன்)** | | **(விஜி)** |
| அவர்களுக்கும் | | அவர்களுக்கும் |

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எல்லோருக்கும் தனிப்பட்ட அழைப்பு வழங்க முடியவில்லை. ஆகவே இந்தப் பத்திரிகை அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகந்தந்து புதுமணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*தங்கள் நல்வரவை நாடும்*

**திரு.திருமதி இ.இரத்தினசபாபதி குடும்பம்**
**திரு.திருமதி இ.அன்புராசன் குடும்பம் (ராசன்)**
**திரு.திருமதி இ.றதீஸ் குடும்பம் (ரஞ்சன்)**
*"சந்திரகிரி", 63, அச்சுக்கூட வீதி,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

**திரு.திருமதி சி.வரதராஜன் குடும்பம்**
*1043, கே.கே.எஸ்.வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

(இருவீட்டார் அழைப்பு) (88858)



உ

# விவாக சோபன அழைப்பு

*அன்புடையீர்!*

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விஷு வருடம் வைகாசி மாதம் 28ஆம் நாள் நாளை (11-06-2001) திங்கட்கிழமை அவிட்ட நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய முற்பகல் 9.05 மணி முதல் 10.22 மணி வரையுள்ள சிங்க லக்ந சுப முகூர்த்த வேளையில்,

யாழ்.அத்தியடிப்பிள்ளையார் ஆலய
பிரதம குரு
சிவஸ்ரீ நா.யோர்கீஸ்வரக்குருக்கள்
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
சிரஞ்சீவி *ஜெகதீஸ்வரசர்மா*
அவர்களுக்கு



யாழ்.வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன்
தேவஸ்தான குரு
சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்
தம்பதிகளின் செல்வப் புதல்வி
சௌபாக்கியவதி *ஸ்ரீதேவி*
அவர்களை

வண்ணை வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் கன்னிகாதானம் திருமாங்கல்யதாரண பாணிக்கிரஹணம் செய்யத் திருவருளை முன்னிட்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- **சமாவர்த்தனம் - 11.06.2001 திங்கள் அதிகாலை 4மணி முதல் 6.05 மணிக்குள் மணமகன் இல்லத்தில் நிகழும்**
- **வதூவர கிருஹப்பிரவேசம் - (வரவேற்புபசாரம்) 11.06.2001 திங்கட்கிழமை மாலை 4.00 மணி அளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**

தங்கள் நல்வரரை நாடும்:

**சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக்குருக்கள்**
*சுபதாம்பிகையம்மா தம்பதிகள்*
*12, பிறவுண் வீதி,*
*முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*

**சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக்குருக்கள்**
*சுகந்திகுந்தளாம்பிகை தம்பதிகள்*
*வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்*
*யாழ்ப்பாணம்.*

*வரவேற்பாளர்கள்* (மணமகன் இல்லம்)
பிரம்மஸ்ரீ யோ.கேதீஸ்வரசர்மா தம்பதிகள் (கரவெட்டி)
பிரம்மஸ்ரீ யோ. ஞானேஸ்வரக்குருக்கள் தம்பதிகள் (வவுனியா)
பிரம்மஸ்ரீ ந.கணேசராஜ சர்மா தம்பதிகள் (கொக்குவில்)
பிரம்ஸ்ரீ யோ.பிரபாகர சர்மா தம்பதிகள் (அத்தியடி)
பிரம்மஸ்ரீ யோ.ரஞ்சிதக்குருக்கள் தம்பதிகள் (நீராவியடி)

*வரவேற்பாளர்கள்* (மணமகள் இல்லம்)
பிரம்ஸ்ரீ சி. ராஜேந்திரசர்மா தம்பதிகள் (அளவெட்டி)
சிவஸ்ரீ சி.பாலஷண்முகக் குருக்கள் தம்பதிகள் (சீரணி)

**(இரு வீட்டார் அழைப்பு)** (88848)



உ

# திருமண அழைப்பு




**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான விஷு வருடம் வைகாசித் திங்கள் 28ஆம் நாள் இன்று (10-06-2001) ஞாயிற்றுக்கிழமை திருவோண நட்சத்திரத்தில் சித்தயோகம் கூடிய காலை 10.38 மணி முதல் 12.08 மணி வரையுள்ள சுப முகூர்த்த நல்வேளையில்

**திரு.திருமதி அம்மாத்துரை**
**தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்**
**திருநிறை செல்வன்**
***புஸ்பகாந்தன்***
**அவர்களுக்கும்**



**திரு.திருமதி கணேசகுரு**
**தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி**
**திருநிறை செல்வி**
***கவிதா***
**அவர்களுக்கும்**

சிங்கன் சித்தி விநாயகன் திருவருள் துணை கொண்டு Hotel Dreikonige மண்டபத்தில் (சுவிஸ்) திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் மணமகளின் பெற்றோர் இல்லத்திற்கு வருகைதந்து அங்கு நடைபெறும் விருந்துபசார வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

**திரு.திருமதி அம்மாத்துரை**
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.*

**(இருவீட்டார் அழைப்பு)**

**திரு.திருமதி கணேசகுரு**
*"மங்களவாசா"*
*ஆனந்த வீதி,*
*மானிப்பாய் கிழக்கு,*
*மானிப்பாய்.*

(88792)


# தொழுநோய் தொடர்பாக இன்று கருத்தரங்கு

சண்டிலிப்பாய்,ஜூன்10

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் பொதுச் சுகாதாரத் திட்டத்தின் பிரகாரம் நடத்தப்படும் தொழுநோய்த் தடுப்புப்பற்றிய பயிற்சிக் கருத்தரங்கு இன்று முற்பகல் 9 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியின் விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் உமா சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும் இப் பயிற்சிக் கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட சமூக மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் என்.சிவராஜா, யாழ்.ஆஸ்பத்திரியின் சரும(தோல்) சிகிச்சைப் பிரிவு வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி எஸ்.குகதாசன் ஆகியோர் கலந்துகொண்டு விரிவுரை நிகழ்த்துவார்கள்.

யாழ். சுகாதாரப் பிராந்தியத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகள், பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள், உதவி வைத்திய அதிகாரிகள் ஆகியோருக்காக இப்பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்படுவதாகவும் இதனால் சம்பந்தப்பட்டவர்களைத் தவறாது இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7-135)

## பாடசாலையில் திருட்டு

ஏழாலை மேற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் கடந்த 7ஆம் திகதி இரவு கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதி வாய்ந்த பாடசாலை உபகரணங்கள் பல திருடப்பட்டுள்ளன.

சுவர் மணிக்கூடுகள், வானொலிப் பெட்டிகள், பிள்ளைகளால் உண்டியலில் சேகரிக்கப்பட்ட ரொக்கப்பணம் உட்பட பல பெறுமதிவாய்ந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

பாடசாலைக் கதவினை உடைத்து திருடர்கள் உட்புகுந்துள்ளனர். இத் திருட்டுப்பற்றி சுன்னாகம் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-7-152)


# மனமார வாழ்த்துகின்றோம்



**ந.யோகராஜன்**
**(J.P.All ISLAND) B.A., PG. Dip. in Edu. &. Dip. in Teach. Edu. SLTES.**

அவர்கள் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளராக ( தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி அமைச்சு வலயம் - 4, வடக்கு, கிழக்கு) பதவி உயர்வு பெற்றமையினையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு அவர் பணி மேன்மேலும் சிறக்கவும் பல்லாண்டு காலம் சேவை செய்து சீரோடும் சிறப்போடும் நீடூழி காலம் வாழவும் மனமார வாழ்த்துகின்றோம்.

- ஆசிரியர்கள், மாணவர்கள்
**யா/தொழில்நுட்பக் கல்லூரி.**

(88851)



# கொழும்பில் தங்குமிட வசதி

சகல வசதிகளுடன், குறைந்த செலவில், நிறைந்த சேவை புரியும், சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில், **No.89, HINNY APPUHAMY MAWATHA,** CO.-13 இல் அமைந்துள்ளது **"VANI INN",** லொட்ஜ். தங்குமிடம் தேவைப்படுவோர் மேற்படி விலாசத்தைப் பதிவு செய்து வரலாம். மேலதிக விவரமறிய : T.P: 01-433182, 472582

- முகாமையாளர்.

(88723)



# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

*10.06.2001*

HAPPY



BIRTHDAY

# செல்வி சி.ஆரணியா

விடத்தற்பளை நுணாவிலைச் சேர்ந்த
**திரு.திருமதி சிவானந்தராசா – லீலாவதி தம்பதிகளின்**
செல்வப் புதல்வி **சி.ஆரணியா**

**தனது முதலாவது பிறந்த நாளை சுவிஸில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.**

ஆரணிக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, விடத்தற்பளையைச் சேர்ந்த அம்மப்பா, பெரியப்பா குடும்பம், அத்தை மாமா குடும்பம், பவுண்மாமா குடும்பம், தும்பளையைச் சேர்ந்த சிற்றம்பலம் குடும்பம், ஜேர்மனி ஐயா மாமா, லண்டன் குட்டி அத்தான் , அத்தை, நுணாவில் தாத்தா, கரம்பகம் துளசிமச்சாள், அக்காமார்களான சாளினி, நிலாந்தினி, மச்சாள்மார், மச்சான்மார் யாவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

**க.நாகராசா**
*(பெரியப்பா)*

விடத்தற்பளை. (88716)

உ
சிவமயம்

# திருநெல்வேலி பழங்கிணற்றடி
# அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருக்கோயில்
# மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலர்
## - இன்று 10.06.2001 -

## ஆலயப் பிரதம குருவின் செய்தி

எல்லா ஆன்மாக்களிலும் கலந்திருப்பவரும் அருவமானவரும் ஒன்றாக விளங்குபவரும் ஒன்றாக விளங்குபவரும், அத்துவிதமானவரும் ஆனந்தம் நிரம்பிய வரும் பரப்பிரமஸ்வரூபியாக விளங்குபவருமாகிய எங்கள் பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகருக்கும் தென்னிந்தியாவிலேயிருந்து தருவிக்கப்பட்ட நூதனமூர்த்திகளாம் கஜலக்ஷ்மி, வள்ளி, தேவசேனா சமேத சுப்பிரமணியருக்கும் பெருமான் திருவருளுடன் குடமுழுக்குப் பெரும் சாந்தி விழா நடைபெறுகின்றது.

திருக்கோயில் இல்லாத திரு, இல், ஊர் என்பது அப்பர் வாக்கு. அதாவது கோயில் இல்லாத ஊரில் இலக்ஷ்மி கடாட்சம் (சீர், சிறப்பு) என்பன இருக்கமுடியாது என்பது கருத்தாகும். ஆனால் தன் பெயரிலேயே திருவைக் கொண்டிருக்கும் திருநெல்வேலிப் பதியாம் புண்ணிய பதியிலேயே இலக்ஷ்மி கடாட்சம் சிறந்து விளங்குகின்றது என்றால் அதற்கு மிகையாகாது. அதற்குக் காரணம் இப்பதியினிலே அநேக ஆலயங்கள் உள்ளமையே.

அவ்வாறு பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றுதான் எங்கள் பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயமாகும். எல்லாத் திருக்கோயில்களிலும் முதலில் விநாயகரைப் பூஜித்த பின்பே ஏனைய மூர்த்திகளுக்கும் பூஜை நிகழும். தர்மம் செய்வது சிறந்தது, உயர்ந்தது என்பதை பல நூல்கள் எடுத்து இயம்புகின்றன. அதிலும் சிறந்தது சிவ தர்மம். சிவதர்மம் எனப்படும் போது ஆலயத்தில் ஆண்டவனுக்குச் செய்யும் தர்மம் ஆகும். இவ்வகையான திருப்பணிகளை நிறைவு செய்து கும்பாபிஷேகம் செய்வித்தல் என்பது சிவதர்மம் யாவற்றிலும் அதி உன்னதமானது. அதிலும் பழைய ஆலயத்தைப் புதுப்பித்தல் பன்மடங்கு புண்ணியத்தைத் தரவல்லது.

இவ்வாறு பரம புண்ணியத்தைத் தரும் வகையில் விநாயகப் பெருமானின் கர்ப்பக்கிரகத்தைத் துவிதளமாக அமைத்து, புதிதாகக் கஜலக்ஷ்மி கலியுகக் கடவுளாம் முருகப் பெருமானுக்கும் தேவியருடன் ஆலயம் அமைத்தும் கும்பாபிஷேகம் செய்விக்கும் உயர்ந்த பணியை விழாக் குழுவினரும் ஊர்மக்களும் மேற்கொண்டு மிகுந்த புண்ணியத்தை ஈட்டிக்கொள்கின்றார்கள் என்பதை நினைக்கும் போது மனம் பூரிப்படைகின்றது.

இப்பணி இனிதே நிறைவேற எல்லாம் வல்ல எங்கள் வீரகத்தி விநாயகப் பெருமானின் பேரருள் கிடைக்கவேண்டும் என்று வேழ முகத்து வீரகத்தி விநாயகப் பெருமானின் பாதக்கமலங்களில் தொழுது வேண்டுகின்றேன்.

'தும்பிக்கையானைத் தொழ துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே'

**பிரம்மஸ்ரீ சதாசிவ சுகுமாரக்குருக்கள்,**
*திருநெல்வேலி சிவன் தேவஸ்தானம்.*

## மாவை ஆதீனகர்த்தாவின் செய்தி

சிவத்தமிழர்களது நாகரிகம் திருக்கோயில்கள் வாயிலாக வளர்த்தெடுக்கப்படுகிறதென சான்றோர்களது தீர்வான முடிவாகும். ஆலயங்களை மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற சார்போடு இணைக்கப்பட்டு வேத, சிவாகம, சிற்பசாஸ்திரங்களினது அடிப்படையின் உரிமையாக்கி எம் முன்னோர் வருங்காலச் சந்ததியினரது மாண்புமிகு வாழ்வின் உயிர் நாடியாக அமைய வளர்த்தெடுத்தனர். ஜென்மமெடுத்த அனைவரும் ஆன்மா இறைவனோடு லயமாக ஞானபாதம் முதிர்வு பெற அதன் பொருட்டு ஆற்ற வேண்டிய கிரியைகளை ஆலயங்கள் மூலம் செயல்படுத்த வேண்டுவதவசியமென நாயன்மார்கள் கூட அறியத் தந்துள்ளனர். இந்தவகையில்தான் ஈழநாடு சைவத் தமிழர்கள் எங்கும் ஆலயங்களமைத்துக் கண்மணி போல் வளர்த்து வருகின்றனர். இந்த வகையில் திருநெல்வேலி பழங்கிணற்றடி திருவருள் மிகு வீரகத்தி விநாயகர் திருக்கோயில் புனராவர்த்தன கும்பாபிஷேகத்தை ஏற்கிறது. விநாயகர் அருள் வேண்டி நிற்கும் மகா கும்பாபிஷேகக் குழுவினர், அளவு கடந்த பக்தியும், ஆற்றல் மிகுந்த தொண்டுகளையும் கொண்டு அழகான திருக்கோயிலாக நிர்மாணித்ததும் தெய்வச் செயலே. எல்லாம் வல்ல விநாயகப் பெருமானது திருவருள் இவர்கட்கும், மற்றுமனைவருக்கும் எப்போதும் கிடைக்க வேண்டுமென ஆசீர்வதிக்கின்றேன்.

**மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள்,**
*மாவையாதீனகர்த்தா.*



பழங்கிணற்றடிப் பிள்ளையார் விக்கிரகம்

## சிவத்தமிழ்ச் செல்வியின் செய்தி

குடமுழுக்கு விழாக்களினால் எமது மண்ணில் இடம்பெற்ற திருக்கோயில்கள் பலவற்றில் எழுச்சியும் வளர்ச்சியும் காணும் பாக்கியத்தைப் பெற்றிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. திருநெல்வேலி பழங்கிணற்றடிப் பிள்ளையார் அப்பகுதி மக்களின் அன்றாடம் வழிபாட்டிற்குரியவர். எண்ணியவை [illegible]க்கும் அருளாற்றல் மிகுந்தவர். நம்பி வந்தவர்களுக்குத் தனது [illegible]யை நீட்டி அருளாசி வழங்குபவர். நாள்தோறும் அதிகாலையில இங்கு ஒரு பக்தர் கூட்டம் பரவசமாக வந்து வழிபடுவதைக் காணலாம்.

10-06-2001 ஞாயிற்றுக்கிழமை இவ்வாலயத்தில் குட முழுக்கு விழா நடைபெற இருப்பது குறித்து பேருவகை அடை கின்றேன். எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பேரரு ளினால் அனைத்து அருள் நிகழ்வுகளும் இனிது நிறைவு பெற வாழ்த்தி அமைகின்றேன்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,**
*சமாதான நீதிபதி,*
*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*

## சுகம் பெருகக் காப்பாய் போற்றி!

பொன்னுயரும் கலைபூத்த திருநெல்வேலி
பொருந்துபழங் கிணற்றடியில் கோயில் கொண்ட
முன்னவனாம் வீரகத்தி விநாயகர் தம்
முதன்மைதரு குடமுழுக்கு விழா சிறந்து
மன்னுதிருத் தொண்டினர்கள் அந்தணர்கள்
வணங்குபல அடியார்கள் சுகம் செழித்து
சென்னி மலர்ச் சிவன் உமையாள் மைந்தனான
செல்வமகன் கணேசனருள் பெருகி வாழி

★ ★ ★

சீரான விஷு வருஷம் இடப மாதம்
திருவோண நாளிலே பெரிய சாந்தி
பாரோங்க ஏற்றருளும் வீரகத்திப்
பரம் பொருளே பார்வதித்தாய் தந்த மைந்தா
தாரான மனம் சிறந்த கோயில் தொண்டர்
தவம் சிறந்த அடியார்கள் அமைத்த கோயில்
நேராக வீற்றிருக்கும் நிமலா நின்றன்
நீள்விழியால் சுகம் பெருகக் காப்பாய் போற்றி!

அருட்கவி சீ.விநாசித்தம்பி.

## பழங்கிணற்றடியும் வினை தீர்க்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகனும்

திருநெல்வேலி கலாசாலை வீதியில் தற்போது பாற்பண்ணை அமைந்துள்ள இடமும் அதனைச் சூழ்ந்துள்ள குடியேற்றப் பகுதிகளும் ஆதியில் பிராமணக் குடும்பங்கள் வாழ்ந்து வந்த காரணத்தினால் 'பிராமணத்திடல்' என்று வழங்கப்பட்டு வந்தது என்றும் பின்னர் அப்பகுதியில் தொற்று நோய் பரவி உயிர்களைப் பலி கொள்ள ஆரம்பித்ததும் அவர்கள் அவ்விடத்தைவிட்டு நீங்கி பழங்கிணறறடிப் பிள்ளையார் கோயிலை அண்டிய பகுதிகளில் வசித்து வந்தனரென்றும் அறியக் கூடியதாக உள்ளது. அக்காலப் பகுதியில் திருநெல்வேலிக் கிராமத்து மக்களின் பாவிப்புக்கென பொதுவில் மூன்று கிணறுகள் தோண்டப்பட்டனவென்றும் அவற்றுள் முதலில் தோண்டப்பட்டு பாவனையில் இருந்தமையால் அக்கிணறும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் பழங்கிணற்றடி என்று அன்று தொட்டு வழங்கப்பட்டு வருகிறது என்றும் கர்ண பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன.

பழங்கிணற்றடிப் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப்பெருமான் தன்னை நம்பித் தஞ்சம் அடைபவர்களுக்கு அபயம் அளிக்கும் தெய்வமாக விளங்குகிறார். தமது திருக்கடாட்சத்தை தங்குதடையின்றி எல்லோருக்கும் வாரி வழங்குகிறார். வினைதீர்க்கும் அந்தப் பெருமானை முதலில் வழிபட்டே இங்குள்ள மக்கள் தங்கள் கருமங்கள் யாவற்றையும் செயற்படுத்துகிறார்கள். துன்பங்களையும் இடையூறுகளையும் அவர் எளிதில் நீக்கி விடுவார் என்ற நம்பிக்கை மக்களிடையே வேரூன்றி இருக்கிறது. எனவே, விக்கினங்களை நீக்கும் வீரகத்தி விநாயகனையே திருநெல்வேலி வாழ் மக்கள் கண்கண்ட தெய்வமாக ஏற்று அப்பெருமானை அல்லும்பகலும் அநவரதமும் போற்றித் துதித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. அடியார்கள் அவரது சந்நிதியில் காதலாகிக் கசிந்து கண்ணீர் உருகித் தங்கள் நெற்றியின் இரு புறமும் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போட்டு வேண்டுதல் செய்வது, தேங்காயைச் சிதறுகாயாக உடைத்து நன்றி செலுத்துவது, ஆலயத்தை வலம்வருவது என்பன தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்துவரும் வழக்கங்கள் ஆகும். வெள்ளிக்கிழமை, சதுர்த்தி, விநாயகர் சஷ்டி போன்ற விசேட தினங்களில் விநாயகப் பெருமானுக்கு உகந்த நிவேதனப் பொருள்களாக சர்க்கரைப் பொங்கல், அப்பம், அவல், எள்ளுருண்டை, தேங்காய், வாழைப்பழம், மாம்பழம்; பலாப்பழம் மற்றும் கிழங்கு, பயறு வகைகளைப் படைத்து வழிபாடு செய்வார்கள்.

ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் தம்மை உள்ளன்புடன் வழிபடும் அடியார்களுக்கு எளிதில் இன்னருள் புரியும் கருணைக் கடல். அவர்களது துன்பங்களை நீக்குவதில் வல்லவர். அத்துடன் கல்வி, செல்வம், ஞானம், சகல கலைகள் ஆகியவற்றையும் வாரி வழங்குவார்.

**"சிவநெறிச் செம்மல்"**
**வை.அநவரதவிநாயகமூர்த்தி**


## கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்

| | | |
|---|---|---|
| **தாஸ் ஸ்ரோர்ஸ்**<br>கலாசாலை வீதி, திருநெல்வேலி. | **ஐங்கரன் களஞ்சியம்**<br>பலாலி வீதி, திருநெல்வேலி. | **சிவகாமி ரேடேஸ்**<br>ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. |
| **கலைவாணி மில்**<br>கொக்குவில். | **ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்**<br>பலாலி வீதி, திருநெல்வேலி. | **தனலக்சுமி புத்தகசாலை**<br>கலாசாலை வீதி, திருநெல்வேலி. |
| **ராம் கரன் புத்தகசாலை**<br>பலாலி வீதி, திருநெல்வேலி. | **ஆறுமுகம் சிற்பாலயம்**<br>அம்மன் வீதி, காளிகோயிலடி, திருநெல்வேலி. | **இராசையா கிறசர்**<br>இராஜபாதை வீதி, கோப்பாய். |
| **ஸ்ரீ கணேஸ் உதிரிப்பாக விற்பனை நிலையம்**<br>பலாலி வீதி, திருநெல்வேலி. | **வேல்முருகன் சைவ உணவகம்**<br>பலாலி வீதி, திருநெல்வேலி. | **குமரன் வர்த்தக நிலையம்**<br>பலாலி வீதி, திருநெல்வேலி. |

# டில்லியைக் கலக்கிய குரங்கு மனிதன்

இரும்பு நகங்கள். அது ஒரு வேளை பித்தளையாகக் கூட இருக்கலாம். ரொம்பக் கூர்மை. ரொம்ப நீளம்.

ஆறடி உயரம். ஏழு அடி கூட இருக்கும். அவன் பாதத்தின் கீழ் ஸ்பிறிங்குகள் உண்டு.

அவன் வருவது நிச்சயம் உங்களுக்குத் தெரியும். அவனது வரு




குரங்கு மனிதனின் கற்பனை வடிவம்

கையை அறிவிக்க சில சமயம் ஒரு பயங்கரமான விசில் சத்தம் கேட்கும், சில சமயம் காற்று வீசி அடிக்கும். சில சமயம் அவனுடைய நிழலைப் பார்க்கலாம். சில சமயம் அவன் உருவமே தெரியும்.

ஆனால் அவன் யாரிடமும் சிக்குவதில்லை. அவன் ஒரு பிசாசைப் போல, எல்லா இடத்திலும் இருப்பான். ஆனால் எங்கும் கண்டறிய முடியாது.

இதைப் படித்தால் ஏதோ ஒரு ரத்தத்தை உறைய வைக்கும் திகில் படக்காட்சி போல் தோன்றும். ஆனால் டில்லியின் முல்லா காலனியில் தூக்கத்தை இழந்து தவிக்கும் மக்களுக்கு இதிலிருக்கும் ஒவ்வொரு வார்த்தையும் நிஜம். ஷம்சத் அலி அந்தக் கதையைச் சொல்ல, 200 இற்கும் மேற்பட்டவர்கள் பயச்சிலிர்ப்போடு



கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். போனவாரம் முழுவதும் டில்லியிலும் அதன் சுற்றுப் பகுதியிலும் இந்த மர்மமான குரங்கு மனிதன்தான் கதாநாயகன். அரசியல்வாதிகள், சினிமா நட்சத்திரங்கள், வியாபாரப் பெரும் புள்ளிகள் எல்லாம் துணை நடிகர்கள்தான். பாதி குரங்கு, பாதி மனித வடிவம் கொண்டு கும்மிருட்டில் வந்து குதித்து அப்பாவிகளைத் தாக்கும் இந்த மர்ம மனிதன் பற்றிய கதைகளில் உண்மையும் உளறலுமான தகவல்கள் எல்லோர் வீட்டிலும் உலாவருகின்றன.

இந்த மர்ம மனிதனின் நடவடிக்கைகள் வேடிக்கைக்காகவோ விளையாட்டுக்காகவோ செய்யப்படுவது போல் தோன்றவில்லை. இந்தப் பயங்கரத்தின் காரணமாக ஒரு கர்ப்பிணிப் பெண் உட்பட இருவர் இறந்தாயிற்று. மே 14ஆம் திகதி, நோய்டாவின் 58வது செக்டாரைச் சேர்ந்த ராமன் குமார், குரங்கு மனிதன் தாக்கியதால் தன் வீட்டு மாடியிலிருந்து விழுந்து இறந்தார். அதற்கு அடுத்த நாள், பிரவீண் குமாரின் மனைவி சுமன் இரண்டு அறைகளைக் கொண்ட தன் குடியிருப்பில் இறந்து போனார். நள்ளிரவுக்குப் பின் "குரங்கு மனிதனின் ஓலத்தைக்" கேட்டுத் தான் தூங்கிக் கொண்டிருந்த மொட்டை மாடியிலிருந்து "பாதுகாப்பிற்காக" கீழே இறங்கினார். இறங்கும் போது தலைகுப்புற விழுந்தார். கிழக்கு டில்லியின் குருதேக் பகதூர் மருத்துவமனைக்கு அவரைக் கொண்டு சென்றார்கள். தலையில் ஏற்பட்ட காயத்தினால் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டார். அவர் குடியிருந்த வீட்டுக்குச் சொந்தக்காரரான கமலேஷ் குமாரியும் அந்த இரவு மாடியில்தான் படுத்திருந்தார். "எங்க எல்லோருக்கும் அந்த ஓலம் கேட்டது" என்கிறார் பயத்திலிருந்து விடுபடாமல்.

கேஸர் பானுவும் தையல்காரரான அவரது கணவர் முகமது இஸ்தியாக்கும் அங்கிருந்து சில வீடுகள் தள்ளி வசிக்கிறார்கள். அதே இரவு, அடையாளம் காண முடியாத ஓர் உருவத்துடன் தாங்கள் போராடியதாகச் சொல்கிறார்கள். அதைக் கட்டிப்போட போர்வையை அந்த "கருப்பு உருவத்தின்" மேல் போர்த்தியதாகச் சொன்னார்கள். "ஆனால் அது எங்களைவிட பயங்கர வேகத்தில் இருந்தது. ஹீ ஹீ ஹீ என்று கத்திக் கொண்டே இருட்டில் மறைந்துவிட்டது. அது எப்படியிருந்ததென்று எங்களால் பார்க்கக் கூட முடியவில்லை" என்கிறார் பானு.

அந்தக் குரங்கு மனிதனைப் பற்றி உலவிவரும் நூறுக்கு மேற்பட்ட கதைகளைப் போலத்தான் பானு - இஷ்தியாக் தம்பதியினரின் கதையும். கிழக்கு டில்லி, அருகிலிருக்கும் காஜி யாபாத், உத்தரப் பிரதேசத்தின் கௌதம் புத்த நகர் போன்ற இடங்களில் குறைந்த வருமான முள்ளவர்கள் வசிக்கும் பகுதிகளில் இரவில் மிக வேகமாக வந்து மறைந்து விடுவான். கோடையின் புழுக்கத்திலிருந்தும் மின் தடையிலிருந்தும் தப்ப இப்பகுதி மக்கள் வீட்டின் மாடிகளில் படுத்து உறங்குவது வழக்கம்.

தாக்கப்பட்டவர்களின் வேதனையும் பீதியும் அதிகரித்துக் கொண்டே போகும் இந்த நிலையில் குரங்கு மனிதனைப் பற்றிய விவரங்கள் கற்பனையாகவே தோன்றுகிறது. உண்மையான சாட்சிகள் இதுவரை கிடைக்கவில்லை என்றே சொல்லலாம். இறந்துபோன சுமன் விவகாரத்திலும் கூட, சுமன் இறந்த போது முதலில் அந்த இடத்திற்கு வந்தவர் புதிய அசோக்நகர் காவல் நிலையத்தின் சப்-இன்ஸ்பெக்டர் மன் வேந்திரசிங்

"அவரது உடலில் நகக் கீறல்கள் ஏதும்இல்லை. தலையில் ஏற்பட்ட காயத்தால்தான் மரணம் ஏற்பட்டிருக்கிறது" என்கிறார் அவர்.

"குரங்கு மனிதனால் பாதிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டவர்கள் எல்லோரும் மருத்துவர்களால் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். பயத்தினால் தப்பி ஓடும் போது சுவரில் மோதியதாலும் கீழே விழுந்ததாலும் ஏற்பட்ட சிராய்ப்புகள் தான் காணப்படுகின்றன. நகக் கீறல்கள் ஏதும் இல்லை.

**இந்தியச் செய்தியூடகங்களில் அண்மையில் பரபப்புடன் வெளியாகிய செய்திகள் குரங்கு மனிதனைப் பற்றியவை.**

**தலைநகர் புதுடில்லி மக்களை பீதியில் உறைய வைத்துள்ள 'குரங்கு மனிதன்' நிஜமா அல்லது கற்பனை வடிவமா என்ற புதிர் இன்னும் விடுபடவில்லை.**

"மொத்தக் குரங்கு மனிதன் கதையுமே பேத்தலாகத் தோன்றுகிறது" என்கிறார் அந்தக் காவல் நிலையத்தின் அதிகாரி யாக்யான் சிங்.

உள்ளூர் பொலீஸும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த பொலீஸும் இது யாரோ சில விஷமிகளின் வேலையாக இருக்கலாம் என்று கருதுகிறார்கள். விசில் சத்தத்தையோ ஓலத்தை ஏற்படுத்தும் சில கருவிகளின் துணையோடு அவர்கள் இப்படிச் செய்து வரலாம் என்று கருதப்படுகிறது.

தாக்கப்பட்ட மற்றவர்கள் கொடுத்த விவரங்களும் தெளிவில்லாமல் இருக்கின்றன. அவர்கள் சொல்லும் கதைகள் நம்பும்படியாகவும் இல்லை.

நோய்டா 9 ஆவது செக்டாரின் குடிசைப் பகுதியில் வசிக்கும் ரிக்ஷாக் காரர் நிமோய் தாஸின் மனைவி ரேகதாஸ், தான் அந்தக் குரங்கு மனிதனைப் பார்த்ததாகச் சொல்கிறார். மே 15ஆம் திகதி காலையில், அவரது வீட்டுச் சுவரிலிருக்கும் சுமார் 1 மீட்டர் விட்டம் கொண்ட துளையின் வழியாக பறந்து வந்ததாகச் சொல்கிறார். "அதற்கு குரங்கின் முகமும் பூனையின் கண்களும் இருந்தன. என்னை நோக்கிப் பறந்து வந்தது" என்கிறார்.

அவரது நெற்றியையும் விரல்களையும் கடித்துக் காயப்படுத்திவிட்டதாகவும் தன் விரல்களால் அவருடைய கணவரின் நான்கு பற்களை பிடுங்கிவிட்டதாகவும் சொல்கிறார். எந்த வழியாக உள்ளே வந்ததோ அதே வழியாகப் பறந்து போனதாகவும் சொல்லப்படுகிறது. ரேகாவின் நெற்றியிலும் விரல்களிலும் கடித்ததால் ஏற்பட்ட காயங்கள் இருப்



குரங்கு மனிதனால் தாக்கிக் காயப்படுத்தப்பட்ட பெண்.

பதை உறுதிசெய்கிறார் அவரைப் பரிசோதித்த டாக்டர் எஸ்.கே. மண்டல்.

இந்தக் கதையிலும் சில ஓட்டைகள் உண்டு. தாஸின் வீட்டிற்குள் நுழைய அந்த சுவர்வரை பறந்துவர வேண்டும். ஏனென்றால் அதன்மேல் ஏற உதவுவது போல்

## நிஜமா அன்றிக் கட்டுக்கதையா?

அருகில் மேடை ஏதும் இல்லை. ஆனால் பறக்கும் குரங்கு மனிதன் கதையையெல்லாம் நம்ப மறுக்கிறது பொலீஸ். ரேகா தாஸுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு வேறு மாதிரி விளக்கமளிக்கிறார்கள் காவல் துறையினர். குடித்துவிட்டு வீட்டுக்கு வந்த நிமோய், மனைவியை அடித்ததால் ஏற்பட்ட காயங்களை குரங்கு மனிதனின் மேல் கட்டி விட்டனர் என்கிறது பொலீஸ். பல் உடைந்ததற்கான காரணத்தைச் சொல்ல முடியவில்லை.

குரங்கு மனிதனைப் பற்றி சந்தேகங்கள் இருந்தாலும் அவனைப் பற்றிய கதைகள் காட்டுத் தீ போல் பரவிவருகின்றன.

கிழக்கு டில்லியின் காவல் நிலையங்கள் அனைத்தையும் "எச்சரிக்கையாக" இருக்கும்படி டில்லி பொலீஸ் கேட்டுக்கொண்டிருக்கிறது.

"பொலீஸின் சக்தியைச் சிதறடிக்க" பாகிஸ்தானின் ஐ.எஸ். ஐயின் சதியாக இருக்கும் என்கிறது புலனாய்வுத்துறை (ஐ.பி.) சற்று ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கத்தைத் தருகிறது.

"குரங்கு மனிதனின் பெயரால் மக்கள் தங்கள் சொந்த விரோதங்களைத் தீர்த்துக்கொள்ளக்கூடும்" என்று அரசுக்கு ஒரு எச்சரிக்கையை அனுப்பியிருக்கிறது.

"அவன் கிரிமினலாக இருந்தால் மக்களை பிறாண்டிவிட்டு மட்டும் போவானா? கொள்ளையடிப்பான் அல்லது கொல்லுவான்" என்கிறார் ஐ.பி. அதிகாரி ஒருவர்."

ஏற்கனவே வெடிகுண்டு வதந்திகளால் தலைநகரில் பல்வேறு மட்டங்களில் இருப்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கத் தடுமாறிக் கொண்டிருக்கும் காவல்துறைக்கு இந்தப் பீதி ஒரு பெரிய தலைவலி.

கடந்த வாரத்திலிருந்து அசோக் நகர் பொலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த 55 பேர் இரவில் "இடைவிடாத ரோந்திற்கு" பணிக்கப்பட்டிருக்கிறார்கள். மாருதி ஜிப்சி, நான்கு மாருதி வேன்கள், இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சக்தி வாய்ந்த டோர்ச்சுகளுடன் வலம் வருகிறார்கள். எந்த வீட்டின் மேலாவது "இருட்டில் அமானுஷ்யமான நடமாட்டம்" இருக்கிறதா எனக் கண்காணித்து வருகிறார்கள்.

அருகிலிருக்கும் நோய்டாவிலும் இதேமாதிரிப் பிரச்சினை தான். செக்டார் 20இல் இருக்கும் பொலீஸ் ஸ்டெஷன், ஒரு லட்சம் பேர் வசிக்கும் 31 செக்டார்களைக் கவனிக்கிறது. முதல் தாக்குதல் நடந்



அந்தப் பயங்கரத்தை விளக்குகின்றார் ஒரு குடும்பப் பெண்

ததிலிருந்து தினமும் இரவு 25 முதல் 30 தொலைபேசி அழைப்புகள் உதவி கேட்டுவருகின்றன. குரங்கு மனிதன் தங்களைத் தாக்கிவிட்டு மறைந்து விட்டதாகச் சொல்கிறார்கள் அழைப்பவர்கள்.

அதேபோல் யாராவது ஒருவர் குரங்கு மனிதனால் ஏற்பட்ட காயத்துடன் வந்துநிற்கவும் தவறுவதில்லை.

மூன்றே நாள்களுக்குள் குரங்கு மனிதன் டில்லியின் தலைப்புச் செய்தியாகிவிட்டான். ஒரு பிரபல ரி.வி.சேனல் தன் எட்டு காமிரா குழுக்களை முக்கியமான இடங்களில் நிறுத்தி வைத்திருக்கிறது. அந்த ஜந்துவைப் பிடிப்பவர்களுக்கு 50,000 ரூபா தருவதாக டில்லி பொலீஸ் அறிவித்திருக்கிறது. இது தனிஆளா அல்லது ஒரு சமூகவிரோதக் கும்பலின் வேலையா என்பதும் தெரியவில்லை. கட்டுக்கதைகளும் பீதியும் அதிகரித்து வந்தாலும் குரங்கு மனிதன் இன்னமும் விடுபடாத புதிர் தான்.

*(நன்றி :- 'இந்தியா டுடே')*



உ
கணபதி துணை

# திருநெல்வேலி

# பழங்கிணற்றடி திருவருள்மிகு வீரகத்தி விநாயகர் திருக்கோயில்

# புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்டபகூடி மகா கும்பாபிஷேக நிகழ்ச்சிகள்

(திருக்குடத் திருமஞ்சனப் பெருஞ்சாந்திப் பெருவிழா)

## 06.06.2001 தொடக்கம் 10.06.2001 வரை

### வைகாசி மாதம் 27ஆம் நாள் இன்று (10-06-2001) ஞாயிற்றுக்கிழமை

காலை 7.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, பரிவார யாக பூர்ணாகுதி, தீபாராதனை, பிரதானமூர்த்தி, ஸ்பர் சாகுதி, மகா பூர்ண குதி, பிரதான யாக தீபாராதனை, ஜப ஹோம பிரதஷண சமர்ப்பணம், அந்தர்பலி, பகிர்ப்பலி, வேதஸ்தோத்திர பாராயணம், யாத்ராதானம், ஸ்தூபி கும்ப வீதி பிரதாஷணம் - காலை 10.37 மணியளவில் ஸதூபி கும்பாபிஷேகம், சர்வ மங்கள வாத்திய சகிதம் பிரதான கும்பங்கள வீதிபிரதாஷணம், மூர்த்திஆவாகனம் பகல் 11 மணி 37 நிமிடத்துக்குள் மஹாகும்பாபிஷேகம், பரிவார அபிஷேகம், மங்களதர்சனம், யஜமான் அபிஷேகம், ஆசார்ய சம்பாவனை, மங்கள ஆசீர்வாதம், ஆசியுரைகள், அருளாசியுரைகள் தொடர்ந்து மகா அபிஷேகம் விசேட தீபாராதனை அருட்பிரசாதம் வழங்குதல்.

நண்பகல் 12.30 மணியளவில் பஞ்சமுக விநாயகர் உற்சவம் - தொடர்ந்து மாகேஸ்வரபூஜையும் நடைபெறும்.

மாலை 5.30 மணி விநாயகர் வீதி உலா நடைபெறும்.

### மஹா கும்பாபிஷேகம் சிறப்புற அருளாசி வழங்கும் குருமணிகள்

**சிவஸ்ரீ புவண சதாசிவக்குருக்கள்**
பிரதமகுரு, சிவன்கோயில் திருநெல்வேலி.

**சிவஸ்ரீ சதாசிவ யோதீஸ்வரக்குருக்கள்**
கல்வியங்காடு.

**சிவஸ்ரீ வைரவநாத ஜெகதீஸ்வரக்குருக்கள்**
மேற்படி தேவஸ்தான பிரதம குருக்கள்.

சர்வபோதகாச்சாரியார்
வேதாகம ஞானபாஸ்கரன்
**சிவஸ்ரீ த.மகாதேவக்குருக்கள்**
காயத்ரீ பீடம், இணுவில்

பிரதிஷ்டா பிரதமகுரு
**சிவஸ்ரீ சதாசிவ சுகுமாரக்குருக்கள்**
ஸ்ரீ காய ரோஹணேஸ்வரர் தேவஸ்தானம்,
திருநெல்வேலி.

சர்வ சாதகாச்சாரியார்
**சிவஸ்ரீ தா.அரிகர சுப்பிரமணியக்குருக்கள்**
தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்.

சாதகாச்சாரியார்
சிவஸ்ரீ ம.தாணுநாதக் குருக்கள், இணுவில்
சிவஸ்ரீ ம.சோமசுந்தரக் குருக்கள், இணுவில்
பிரம்மஸ்ரீ ம.ஸ்ரீவத்சாங்க சர்மா, இணுவில்

வேதபாராயணம்
பிரம்மஸ்ரீ ஜெ.சிவகுமாரசர்மா
பிரம்மஸ்ரீ சி.ஆனந்தகிருஷ்ணசர்மா
பிரம்மஸ்ரீ மு.ஸ்ரீநிவாசசர்மா

கும்பாபிஷேகத்தைச் சிறப்பிக்கும் ஏனைய சிவாச்சாரியார்கள்
சிவஸ்ரீ சோ.ந. ராஜக்குருக்கள், நல்லூர்
சிவஸ்ரீ இ.சோமசுந்தரக்குருக்கள், அளவெட்டி
சிவஸ்ரீ இ.மகாலிங்கக்குருக்கள், அளகொல்லை
சிவஸ்ரீ கி.நாராயணக்குருக்கள், வண்ணை
சிவஸ்ரீ து.சுந்தரமூர்த்திக்குருக்கள், மாவிட்டபுரம்
சிவஸ்ரீ நா.பத்மநாதக்குருக்கள், வண்ணை
சிவஸ்ரீ சதாசிவ சிவகுமாரக்குருக்கள், கல்வியங்காடு
சிவஸ்ரீ க.பாஸ்கரக்குருக்கள், வண்ணை
சிவஸ்ரீ இராம பாலசந்திரக்குருக்கள், இளவாலை
சிவஸ்ரீ சபா ஸ்ரீசந்தனக்குருக்கள், நந்தாவில்
சிவஸ்ரீ பால பஞ்சாட்சரக்குருக்கள், நாச்சிமார்கோயிலடி
சிவஸ்ரீ சி.ஜோதீந்திரக்குருக்கள், பருத்தித்துறை

ஆலய நித்திய பூசகர்
பிரம்மஸ்ரீ ஜெ.உமாசுதசர்மா
பிரம்மஸ்ரீ ஜெ.ஞானானந்த சர்மா

யாக சம்ரக்ஷகர்கள்
பிரம்மஸ்ரீ சே.சிவபாலசர்மா, இணுவில்
பிரம்மஸ்ரீ சதாசிவ புவனேந்திரசர்மா
பிரம்மஸ்ரீ ச.கணநாதசர்மா
பிரம்மஸ்ரீ ம.மகேந்திரசர்மா
பிரம்மஸ்ரீ ப.வாசுதேவசர்மா

*ஆசியுரை:*
மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள்
மாவை கந்தசுவாமி கோயில் ஆதீனகர்த்தா.
பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர்
(தலைவர்: இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.)
அருட்கவி சீ.விநாசித்தம்பி
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்

*அருளுரை:*
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(2ஆம் குருமகாசந்நிதானம், நல்லை ஆதீனம்.)

*கும்பாபிஷேக தினத்தன்று ஈழத்தின் தலைசிறந்த நாதஸ்வர, தவில் கலைஞர்களின் கச்சேரி இடம்பெறும்*

சிற்பாச்சாரியார்
மா.திரவியராசா

சுற்றுப்பிரகாரம்
நா.நவரட்ணம்

வர்ணவேலை
க.ரதீஸ்

யாக அமைப்பு
தாசன் பந்தல்

பூமாலை
எஸ்.விநாயகமூர்த்தி

கட்டடம்
நா.செல்வம்

மங்கள இசை
சி.செல்வகுமார் குழுவினர்

ஒளி
மனோ லைட்

ஒலி
கண்ணா சவுண்ட்

குறிப்பு: மண்டலாபிஷேகம் 48 நாள்கள் நடைபெறும். அடியார்கள் பூஜைக்கு வேண்டிய பால், பூ, இளநீர் முதலியவற்றை நேரகாலத்துடன் ஆலயத்தில் ஒப்படைத்து உதவும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

**கனகா பத்திரிகை விற்பனையகம்,**
இல.06, நவீனசந்தை,
திருநெல்வேலி.

**ஐங்கரன் வீடியோ விஷன்**
இல.39, ந.ப.நோ.கூ.சங்க ஒழுங்கை,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(88875)

# வேதாகம கற்றல் வகுப்புக்கள்

யாழ்.மறை மாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் 6 மாத கால வேதாகம கற்றல் தொடர் வகுப்புகள் நடைபெறவுள்ளன.

'வேதாகமத்திற்கு விழித்தெழுவோம்' என்ற கருப் பொருளில் நடைபெறவுள்ள மேற்படி தொடர் வகுப்புகள் எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்.மறைக்கல்வி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளன. வேதாகம வகுப்புகளில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தமது பங்குத தந்தையர்களுடன் தொடர்புகொணடு உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று நிரப்பி அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

## ஆங்கில டிப்ளோமா பரீட்சை

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் தேசிய ஆங்கில டிப்ளோமா 2ஆம் வருடப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் 25 ஆம் 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக நிறுவனத்தின் இயக்குநர் ரி.இராஜரட்ணம் அறிவித்துள்ளார்.

(ஐ-10)

# பெரதேனியா
# பல் சிகிச்சை, மூக்குக் கண்ணாடி அகம்

(பல் கட்டுதல், மிதப்புப் பற்களுக்குக் கிளிப் போடுதல் மற்றும் வாயால் சுவாசிப்பதைத் தடுப்பதற்கான ORAL SCREEN தயாரித்தலிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிறப்புத் தேர்ச்சி பெற்று வடமாகாணத்தில் இயங்கும் ஒரே ஸ்தாபனம்)

494, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண நிறுவனம்

தனது 15ஆம் ஆண்டில் காலடி வைப்பதையிட்டு

சுன்னாகம், கொக்குவில் வாழ்மக்களுக்கு

**ஒரு நற்செய்தி!**

*எமது சுன்னாகம், கொக்குவில் கிளைகளில்,*

1. இலவச கண் பரிசோதனை செய்யப்பட்டு அரைச்சலாரில் மூக்குக் கண்ணாடி வழங்கல்
2. பல் கட்டுதல், கிளிப் போடுதல் (U.R.A OR L.R.A) அரைச்சலாரில் இன்று முதல் செய்து கொடுக்கப்படுகின்றன என்பதை மன மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

*குறிப்பு:- பல் கட்டுதலில் எம்மால் அதிஉயர் தரமான (H.S) England பற்களே பாவிக்கப்படுகிறது. கடந்த 3 வருடங்களாக சங்குப் பற்கள் இலங்கையில் பாவனையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கண் சத்திர சிகிச்சையின் போது பாவிக்கப்படும் இன்ரகூலர் லென்ஸ் உட்பட சகல லென்சினதும் யாழ்நகர ஏக விநியோகஸ்தர்கள்.*

**ஏனைய கிளைகள்**

*வடமராட்சியில்*
**"மோகன்ஸ்" கட்டடம்**
*'பெற்றோல் செற்' அருகில், நெல்லியடி.*

**'ரஞ்சிதா கிளினிக்'** *ஆனைக்கோட்டை.*

*வட்டுக்கோட்டை றோட், சித்தங்கேணி.*

**'துரைஐயா' அவனியூ,** *அச்சுவேலி.*

**Residence:-**
*மாவடி றோட், மூளாய்,*
**Tel: 070-213008**

(88890)

உ

# திருமண அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் விஷு வருஷம் வைகாசித் திங்கள் 28 ஆம் நாள் நாளை (11-06-2001) திங்கட்கிழமை முற்பகல் 10.41 மணி முதல் 11.53 மணிக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில்



எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**நாகராசா அருணன் (அருள்)**
(அஞ்சலகம், கைதடி)
அவர்களுக்கும

எமது புத்திரி
திருநிறை செல்வி
**சுப்பிரமணியம் நிர்மலவேணி**
(வேணி)
அவர்களுக்கும

யாழ்ப்பாணம், நல்லூர், சட்டநாதர் வீதி, இளங்கலைஞர் மன்றத்தில் திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

றவினர்களும் நண்பர்களும் நாமும் இடம்பெயர்ந்திருப்பதனால் எல்லோருக்கும் நேரில் தனியான அழைப்பு ழங்க முடியவில்லை. ஆகவே இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகமளித்து புது மண மக்களை வாழ்த்தும் வண்ணம் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

**திரு. தம்பு நாகராசா**
**திருமதி நாகராசா புவனேஸ்வரி**
**திரு. திருமதி நா.தயாபரன்** (சுவிஸ்)
**திரு. நா.அகிலன்** (லண்டன்)
*கைதடி தெற்கு, கைதடி.*

**திரு.திருமதி கந்தர் சுப்பிரமணியம்**
*கைதடி தெற்கு, கைதடி.*

**(இருவீட்டார் அழைப்பு)** (88883)

உ
சிவமயம்
"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அ:து"

# திருமண அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான விஷு வருடம் வைகாசித் திங்கள் 28ஆம் நாள் (11-06-2001) திங்கட்கிழமை அமிர்த சித்த யோகமும், அவிட்ட நட்சத்திரமும் கூடிய பகல் 11.11 மணி முதல் 12.23 மணிவரையுள்ள (இலங்கை நேரம்) சிங்கலக்கின சுப வேளையில்

**திரு. திருமதி க.வேலுப்பிள்ளை**
**தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்**
**திருநிறை செல்வன்**
**பாஸ்கரன்**
(பொறியியலாளர் - சிங்கப்பூர்)



**திரு. திருமதி கு.கேசவன்**
**தம்பதிகளின் ஏக புத்திரி**
**திருநிறை செல்வி**
**சகிலா**
(ஆசிரியை, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.)

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதிப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்:

**திருமதி இ.வேலுப்பிள்ளை**
*பாடசாலை வீதி, எழுதுமட்டுவாழ்.*

**திருமதி ம.கேசவன் (ஆசிரியை)**
*மீசாலை வடக்கு, மீசாலை.*

திருமண மண்டபம்: **நெல்லை முருகன் திருமண மண்டபம்** (நெல்லியடிச் சந்தி அருகில்)

**(இருவீட்டார் அழைப்பு)** (88887)

சுன்னாகத்தில்!

# எரிக்கணேஷ்

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் நலன்கருதி எமது ஸ்தாபனம் சுன்னாகத்திலும் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

- ✦ முக அமைப்புக்கேற்ப, வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட விசேட தரத்திலான சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ள....
- ✦ மிதப்புப் பற்களுக்கு 'கிளிப' பொருத்திக்கொள்ள....
- ✦ தரமான, நவநாகரிகமான மூக்குக் கண்ணாடி பிறேம்களைத் தெரிவு செய்யவும்.....

சகலவிதமான, வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகளைத் தெரிவு செய்திட

## எரிக்கணேஷ்

பல்கட்டுமிடமும் மூக்குக் கண்ணாடியகமும்
இல.80, கே.கே.எஸ். வீதி, (பழைய பொலீஸ் நிலையம் முன்பாக) சுன்னாகம்.

*தலைமை:*
564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/17057)

*கிளை:*
91, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**ஆறுமுகம் சண்முகம்**
(அரசாங்க ஒப்பந்தகாரர்)

தோற்றம் : 04-09-1951
மறைவு : 23-05-2000

**அன்புத் தந்தையே! ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது!**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

*திக்கரை,*
*களபூமி, காரைநகர்.* (88889) - **மனைவி, பிள்ளைகள்.**

# கண்ணீர் அஞ்சலி

எமது தாதியர் பயிற்சிப் பாடசாலையில் கல்வி பயிலும் தாதிய மாணவி

செல்வி லலிதரஞ்சினி செல்லத்துரை

அவர்களின் அன்புத் தந்தையார்

**தம்பு செல்லத்துரை**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், போதனாசிரியர்கள்,
சக தாதிய மாணவர்கள்,
**யாழ்.தாதியர் பயிற்சிப் பாடசாலை.**

(88888)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா தியாகலிங்கம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தியாகலிங்கம் நேற்று (09-06-2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் கந்தையா - செல்லம் ஆகியோரின் அன்பு மகனும், குணசேகரியின் அன்புக் கணவரும், பிரதீபன், பிரதாபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தரலிங்கம், குகராஜா, சிவராஜா, மகாலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், **M.S**. நவரட்ணம், பரமேஸ்வரி மனோகரதேவி, சாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் கொக்குவிலில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த இறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முகவரி:*
*ஞானபண்டித வித்தியாசாலை அருகில்*
*ஆடியபாத வீதி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*

*தகவல்:*
சுந்தரலிங்கம் (சகோதரன்)
குகராஜா (சகோதரன்)
M.S. நவரட்ணம் (மைத்துனன்)

(88886)

## Dr. செல்லையா செல்லத்தம்பி R.M.P.

காரைநகரைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்து வந்தவருமாகிய செல்லையா செல்லத்தம்பி 08.06.2001 வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் ஜெயந்தியின் அன்புக் கணவரும் கேபாலபிள்ளை - காலஞ்சென்ற சகுந்தலை தம்பதிகளின் மருமகனும் செல்வகுமார், செல்வேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிந்துஜா, ரசிதாரணி ஆகியோரின் அன்பு மாமனும் செல்வேஸ்வரியம்மா செல்வச்சாமி காலஞ்சென்றவர்களான செல்வதி, ஜெயல்லருள்பவன், செல்லமுத்து, ஜெயமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னரின் பூதவுடல் நேற்று (9.06.2001) சனிக்கிழமை இந்தியாவில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*81A, சிவன் பண்ணை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (88893)

*தகவல்:*
செ.செல்லச்சாமி
(சகோதரன்)

# குடாநாட்டில் அசாதாரண சூழ்நிலை

# குடிசன மதிப்பீடு ஏற்க முடியாதது!

## மனித நேய அமைப்புகள் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். குடாநாட்டின் இன்றைய சூழ்நிலையில் குடிசன மதிப்பீட்டை நடத்துவது, எந்த வகையிலும் ஏற்புடைய தொன்றல்ல. எனவே இந்த மதிப்பீடு தொடர்பான பணிகளை உடன் நிறுத்தி வைக்க உத்தரவிடவும்.

இவ்வாறு ஜனாதிபதியிடம் கோரும் மகஜர் ஒன்றை யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

குடிசன மதிப்பீடானது பொருளாதார அரசியல் சமூக ரீதியிலான முக்கியத்துவமுடைய ஒருவிடயமாகும். எதிர்காலத் திட்டமிடலையும், சமூகநல அபிவிருத்தியையும், நிதி திட்டமிடலையும் மேற்கொள்வதற்கு அடித்தளமாக இருப்பது குடிசன மதிப்பீட்டு புள்ளிவிவரமாகும். சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும், பிரதேச ரீதியிலும் முக்கியத்துவமுடைய குடிசன மதிப்பீடு வெறும் கண் துடைப்பாகவும், காலக்கிரமத்தில் செய்யவேண்டும் என்பதற்காக ஒரு கடமையாகவும் மேற்கொள்ளப்படுமாயின் அதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும். இன்றைய வடக்கு—கிழக்கு அரசியல், சமூக வாழ்வு சீர்குலைந்திருப்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு விடயம். சாதாரண சூழ்நிலை அழிந்து அசாதாரண சூழ்நிலை கோலோச்சி வருவது ஒரு கசப்பான உண்மையே.

குடிசனத்தொகை கணிப்பீட்டு முறைகளில் மாதிரி ஆய்வுமற்றும்உயிர்ப்புள்ளி விவரங்களுக்கும் மேலாக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் குடிசன மதிப்பீடே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதாவது பிறப்பு வீதம், இறப்பு வீதம் என்பவற்றிலும் பார்க்க இடப்பெயர்வு அதிகரிப்பே எமது பிரதேசத்தில் இன்று அதிக செல்வாக்கு செலுத்தி வருகின்றது.

### இடப்பெயர்வு

இவ்வாறான யாழ். குடாநாட்டை எடுத்துக் கொண்டால் யுத்தம் வெடிக்கும் முன்பு இருந்த குடிப்பரம்பல் இன்றில்லை. 1995இல் பாரிய இடப்பெயர்வுகள் பொது மக்களை சொந்த இடத்திலிருந்து நாலா திசைக்கும் விரட்டியது. வன்னிப்பகுதிக்கும், தென்பகுதிக்கும் ஏன் வெளிநாடுகளுச்கும் குடியமர்வினை ஏற்படுத்தியது. இதனால் குடும்பங்கள் சிதறி உறவுகள் அழிந்து மக்கள் ஏதிலிகளாகவாழும் இன்றைய நிலையில் குடிசனமதிப்பை மேற்கொள்வதென்பது உகந்த தருணமல்ல. இடத்திற்கிடம், பிரதேசத்திற்கு பிரதேசம் குடிப்பரம்பல் சமநிலையானது சீர்குலைந்துள்ளது. உதாரணமாக தென்மராட்சியில் தற்போது குடிசனப்பரம்பல் மிக சொற்பமாகவே உள்ளது. அதே வேளை வலிகாமம், வடமாராட்சி,ப் பகுதியில் குடிசன அடர்த்தி அதிகரித்துள்ளது. இவ்வாறான நிலையில் உண்மையான பிரதேச குடிவாழ் நிலை மிகவும் ஏற்புடையதாகவே இருக்கும். வன்னிப் பகுதியிலும், இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளிலும் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதற்கான சாத்தியம் மிகக் குறைவாகவே இருப்பதாக அறிய முடிகின்றது.

குடிசன மதிபீடானது தனியே நபர்களை எண்ணும் விடயமல்ல. அதற்கும் மேலாக குடும்ப வசதிகள், வாழ்க்கைத் தரம், வயதுப் பரம்பல், தொழில் போன்ற இன்னோரன்ன விடயங்களையும் பதிவு செய்யும் கருமமாகும். இந்த முடிவின் அடிப்படையிலேயே அரசினது எதிர்கால செயற்பாடுகள் அமையும். இதனால் இன்றைய சூழ்நிலையில் குடிசன மதிப்பீட்டின் உண்மையான நோக்கத்தைக் கண்டறிய முடியாது.

இலங்கையின் தேர்தல் முறை விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையிலமைந்துள்ளது. இதன்படி பிரதேசரீதியில் குடிசனத்தொகை வீழ்ச்சியடைந்துள்ளது. ஏற்கனவே நிலவிய பிரதிநிதித்துவத்தைப் பாதிப்படையச் செய்யலாம். அது மட்டுமன்றி பல்கலைக்கழக அனுமதி, வேலைவாய்ப்பு, முதலீட்டுத் திட்டங்கள், நகராக்கங்கள், கீழ்க்கட்டுமான வசதிகள் போன்றவற்றில் பெரும் பாதிப்பை இத்தகைய குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விவரங்கள் ஏற்படுத்தல் கூடும். உதாரணமாக சன அடர்த்தி குறைந்த பிரதேசங்கள் புறக்கணிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. இலங்கையின் அபிவிருத்தியில் பிரதேச ரீதியிலான அகன்று செல்லும் இடைவெளியை இக்கணிப்பீடுகள் ஏற்படுத்தி விடக்கூடும்.

### சரியான தகவல்கள் கிடைக்குமா?

குடிசன மதிப்பீட்டின் போது நியாயமான நம்பகம் தன்மையை நூறு சதவீதத் எதிர்பார்க்கமுடியுமா என்பது கேள்விக்குறியே. சில வேளைகளில் எழுந்தமான மதிப்பீடுகளுக்கும் குடி மதிப்பீட்டாளர்கள் முகம் கொடுக்க வேண்டியிருக்கலாம். போக்குவரத்து இடைஞ்சல்கள், மற்றும் மிதி வெடிகள், கண்ணி வெடிகள்உள்ள இடங்களுக்கு' தூரத்தில் நின்றுதான் மதிப்பீடுகள் செய்யவேண்டி இருக்கும். இது ஒரு புறமிருக்க குடியிருப்பாளர்களிடம் இருந்து உண்மையான தகவல்களை கறக்கவும் கடினமானதாகவே இருக்கும். அதாவது பெற்ற பிள்ளைகள் எங்குள்ளனர்? என்ன செய்கின்றனர்?எங்கு உறங்குகின்றார்கள் என்பது சிலருக்கு இன்னமும் புரியாத புதிராகவே உள்ளது.

நாம் சற்று வித்தியாசமாக சிந்திப்போமானால் அதாவது குடிப்பரம்பல் குறைந்த இடங்களுக்கு குடிப்பரம்பல் கூடிய இடங்களில் இருந்து ஆள்களை கொண்டு வந்து குடியேற்றுவார்களேயானால் அது இன்னமும் பிரச்சினைகளை பூதாகாரமாக்கிவிடும். இந் நடவடிக்கைகளுக்கும், புள்ளி விவரங்களுக்கும், அதன் கோப்புகளும் துணையாக மாறலாம். ஏனெனில், தேசியம் என்ற சொல்லில் எல்லாமே அடங்குமல்லவா? — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

---

# புதுமைகள் மிக்க அந்தோனியார்

# நாடுவோர் பிணி நீக்க வல்லவர்

> பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாத் திருப்பலி இம்மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

புதுமைகள் பல புரிய அருள் பெற்ற புனித அந்தோனியார் போர்த்துக்கல்தேசத்தின்லிஸ்பன் நகரில் 1195 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி பிறந்தார். இவருடைய பெற்றோர் அரச குடும்பத்தைச் சேர்ந்த பிரபுக்கள் ஆவார்கள். இவர் திருமுழுக்கின் போது பெற்ற பெயர் பேர்டினன்ட், சிறு வயதிலே துறவறத்தில் இணைந்ததால் தனது பெயரை அந்தோனி என மாற்றிக்கொண்டு துறவி வேடம் அணிந்தார்.

இவர் இயேசுநாதரில் வைத்த அசைக்க முடியாத நம்பிக்கையினால் கடவுள் இவரை ஒரு தலை சிறந்த போதகராக உலகில் தோற்றுவித்தார். இதனால் புனிதர்களில் இவர் உயர்ந்தவரானார்.

வேதநூல்களை வாசிப்பதில்விற்பன்னராக விளங்கிய அந்தோனி, உயர் ஞானத்தினால் இறைவனிடம் நேரடித் தொடர்பைப் பெற்றார். அத்தோடு அவர் தேவதாயில் கொண்ட அன்பினாலும், ஆழ்ந்த பக்தியினாலும் அவரின் திருக்கரத்தினில் உள்ள வேத புத்தகத்தின் மீது குழந்தை யேசு அமர்ந்தார். இறைவனின் தோழராகிக் கோடி அற்புதங்கள் புரிந்து கோடி அற்புதர் எனப் பெயர் பெற்றார்.

இவரின் அற்புதங்கள் சொல்லில் அடங்கா. நற்கருணையில் இறைவன் உள்ளதை மனிதர் உணர கழுதையை வணங்கச் செய்தார். இவரது போதனைகள் ஒரு பாஷையினால் பிரசங்கம் செய்ய, பல பாஷையில் உள்ளோர் கேட்கக் கூடியதாக இருந்தது. ஒரு வேளையில் இரு இடங்களில் காணப்பட்டார். காணாமற்போன பொருள்களைக் கண்டடையச் செய்வதில் திறமை பெற்றவர். பேய்களையோட்டும் தந்திரம் தெரிந்தவர் நோய்களை குணமாக்கிய அற்புதர்: தனது 36 ஆவது வயதில் 1231 ஆம் ஆண்டு ஆனி மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேவதாயின் மகிமைப் பாடலைப் பாடிய வண்ணம், இப்பூவுலகை விட்டு விண்ணுலகு சென்றார். அவருடைய உடல் செவ்வாய்க்கிழமை அடக்கம் செய்யப்பட்டது. அக்கிழமையே புனிதருக்கு உரித்தானது.

**ஞாயிறு நற்பிரசாதம்**

இவர் மரித்த ஒரு வருடத்தினுள் அப்போதுள்ள பாப்பாண்டவரினால் புனிதர் என பிரகடனப்படுத்தப்பட்டு தேவ பீடங்களில் வணங்கும் பாக்கியம் பெற்றார்.

வாழ் நாளிலே புதுமைகள் பல செய்த புனிதர் தன் மரணத்தின் பின் அற்புதங்கள் நிகழ்த்தியமை கண்டு வியப்புற்றவர்கள் இவரின் கல்லறையை 31 வருடங்களின் பின் திறந்து பார்த்த பொழுது அவரின் புதுமை செய்தநாக்கு அழியாமல் காணப்பட்டது. அவ்வேளை புனித பொனவெஞ்சர் அவருடைய கரங்களில் நாவை ஏந்தி பரவசத்துடன் 'இறைவனைஎன்றும்புகழ்ந்து அவரை அன்பு செய்து மக்களை அவரிடம் அழைத்து சென்ற ஓ பாக்கியமான நாவே நீ இறைவனுடைய காட்சியில் எத்துணை மகிமை பெற்றிருக்கிறாய்' என்றார்.

''நா'' அழியா வரம் பெற்றவரின் ஆலயங்கள் அநேகமாக கரையோரப் பகுதிகளில் அமைந்திருப்பதைக் காணலாம். இப்பகுதி கத்தோலிக்க மக்கள், புனிதரின் நவ நாள்களுடன் திருநாளை வருடா வருடம் கொண்டாடுவதைப் பாரம்பரியமாகக் கொண்டிருக்கின்றனர். பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம் இற்றைக்கு 150 ஆண்டுகளைத் தாண்டியுள்ளது.

கடந்த ஆண்டு, கால வேக மாற்றத்தினால் புனிதரின் விழாவைக் கொண்டாட முடியாது மக்கள் மனங் கலங்கினர். இம்முறை பங்குக் குருவானவரினதும், மக்களினதும் பெரு முயற்சியால் நவநாட் திருப்பலிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கரையோரப் பகுதியில் அமைந்த இவ் ஆலயத்தோடு கடல் நடுவே மீன்களை வரவழைக்கும் புனிதரின் திருவுருவம் அமைக்கப்பட்டிருப்பது இவ் ஆலயத்தினதும் ஊரினதும் சிறப்பம்சமாகும். அலைகடலின் ஓசையும் பாடும் மீன்களின் இசையும், இனிய தென்றலும் ஒன்றை ஒன்று முத்தமிட, மக்கள் மனம் மகிழ ஆனி 13 ஆம் திகதி புனித அந்தோனி தேரில் வலம் வருவார். அவ்வேளை எமது தேவைகள், வேண்டுதல்கள், விண்ணப்பங்களை அவரிடம் சமர்ப்பித்து உடல் நோய்களை, உள நோய்களைக்குணமாக்கி ஆன்ம நலன்பெற்று வாழ நம்பிக்கையுடனே புனித அந்தோனியாரை வேண்டுவோம்.

★

**அ.பிறிற்ரோடக்ளஸ்**

**பாஷையூர்**

---

# இலங்கையில் 20 சத வீத மக்கள் மனநோயால் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 10

இலங்கையின்சனத்தொகையில் 20 சதவீதமானோர் ஏதோ ஒரு காரணத்தால் மனநோய்க்கு ஆளாகியிருப்பதாக சுகாதார அமைச்சர் டபிள்யூ. டி.ஜே. செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

களுபோவில வைத்திய சாலையில் வியாழக்கிழமை புதிய கட்டடம் ஒன்றிற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்குப் போதியளவு வைத்தியர்கள் இல்லாததே நோயாளரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகும்.

இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு வெளிநாடுகளுக்கு சென்றுள்ள மன நோய் வைத்திய நிபுணர்களை மீண்டும் இலங்கைக்கு வரவழைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மனநோயாளிகளுக்கு சிகிச்சை வழங்குவதற்காக அதிகளவிலான வைத்தியர்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

(ஐ)

# சொக்கனின் நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். பல்கலைக்கழக தமிழ்மன்றம் ஏற்பாடு செய்துள்ள வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) எழுதிய 'இலக்கியக் கருவூலம்' என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்மன்றத் தலைவர் அ. பௌநந்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் ஆசியுரையை மாவை ஆதீனகர்த்தா மஹாராஜ ஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள், தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் சு. ஜெபநேசன் ஆகியோர் நிகழ்த்துவர்.

வாழ்த்துரையை துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை வழங்குவார். வெளியீட்டுரையை செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் நிகழ்த்துவார். ஆய்வுரைகளை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் பண்டிதர் செ. திருநாவுக்கரசு யாழ். பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் வழங்குவர்.

(ஐ-7)

# கும்பாபிஷேகம்

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 11.23 மணி தொடக்கம் 12.10 மணி வரைக்கிடையில் நடைபெற உள்ளது..

அன்றைய தினம் சிவஞானப்பிள்ளையார், வாஞ்சிநாதேஸ்வரர், மங்களநாயகி அம்பாள் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெறும்

கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்க கிரியைகள் கடந்த 7 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துவார்கள்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மஹோற்சவமும் நடைபெறும்.

(ஐ-152)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு

ஆனைப்பந்திச் சந்திக்கு அண்மையில் 5 3/4 பரப்புக்காணியும், வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: திருமதி பாலசுசீலா தயானந்தன், 61/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். ஒவ்வொரு நாளும் 3 மணிக்குப் பின்பு சந்திக்கலாம். (88819)

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக இல.558 இல் ஒரு பரப்புக் காணியில் இரு கடைகள் விற்பனைக்குண்டு. ஒவ்வொரு கடையும் தலா **15'x30'** விஸ்தீரணம் உடையவை. தொடர்புகளுக்கு: **T.P** 597450/077-307227. **(C/17039)**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 25 வயதுடைய மிருகசீரிடம் 4ஆம் பாதம், 5'.5" உயரமுடைய பட்டதாரி மணமகளுக்கு உள்ளூரில் என்ஜினியர், டாக்டர் அல்லது அரச, தனியார் துறையில் உயர் பதவி வகிக்கும் மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். கொழும்பில வீடு, காசு, சீதனமாக வழங்கப்படும். விள. இல.1300, மே/பா உதயன். (88789)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், சேவல், கல்பேட் என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். 31, மால்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (88836)

**BROILERS, CUllBirds - COCKERELS** இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) குறைந்த விலையில் தினமும் காலை 6.30 மணி முதல் மாலை 6.00 வரை பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (88844)

இறைச்சிக்கோழி **(BROILERS)** கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (88476)

## Birthday Cards

புத்தம் புதிய டிசைன்களிலான வண்ணமிகு **Birhday Cards, Wedding Cards** என்பன விற்பனையாகின்றன. தொகையாக வாங்குபவர்களுக்கு விசேட கழிவு தரப்படும். தொடர்பு: பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (88879)

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 26 வயதுடைய எம்.பி.பி.எஸ். டாக்டருக்கு மணமகள் தேவை. மணமகள அழகானவராகவும், அடக்கமானவராகவும், குடும்பப் பாங்கானவராகவும் இருத்தல் அவசியம். புகைப்படம் சாதகக் குறிப்பு மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை கண்ணியமாகத் திருப்பி அனுப்பி வைக்கப்படும். தொடர்புக்கு: விள.இல.1301, மே/பா. உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (88846)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சங்கீத், 40 விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (கல்வியங்காட்டுச் சந்தைக்கு அண்மையில்) (88831)

புறொயிலர் இறைச்சிக்கோழி மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. 334, **K.K.S.** வீதி, (குணம் கொத்து ரொட்டிக் கடைக்கு அடுத்த வீட்டில்), சிவன் கோயிலடி, யாழ்ப்பாணம். (88885)

## வீடு விற்பனைக்கு

வேம்படி வீதி, 25ஆம் நம்பர் கொண்ட இரண்டு பரப்பு ஒரு குழி காணியில் இருக்கும் வீடு உடன் விற்பனைக்கு உள்ளது. **(VACANT Possession)** தொடர்பு: முகாமையாளர், லைடன் ரெக்ஸ்ரைல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.2381 (88884)

## ஆண்டு 5 புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் 2001க்கான அம்பிகைபாகனின் புத்தகம் புதிய வழிகாட்டி, சொற்பப் பிரதிகளே கைவசம் உள்ளன. விலை ரூபா 240/=. தொடர்பு: பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (88877)

## விற்பனைக்கு

கொம்பிறேசர், பாத், மபிறிசர், ஐஸ்பழப் பெட்டிகள், தட்டுக்கள், ஐஸ்கிறீம் மீற்றர் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி.கஜன், 12/5, சந்தனமாதா கோயில் வீதி, பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி. (88717)

துணைவிச் சந்தி, சங்கரத்தையில் நான்கு பரப்பு விஸ்தீரணமுள்ள வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: **K.**தங்கத்துரை (ஓய்வுபெற்ற உபஅதிபர், அராலி இந்துக் கல்லூரி) சங்கரத்தை, வட்டுக்கோட்டை. **(C/17031)**

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ 350/-) தொடர்பு:- பாரதி, 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3081 (C/16990)

## இது இந்து மதம்

தகுந்த சான்றுகளுடன் இந்து மதம் பற்றிய உண்மைகளைத் தெளிவாகச் சொல்கிறது. சாமிஜி எழுதிய "இது இந்து மதம்" யாழ்ப்பாணக் கலாசாரத்தின் ஆணிவேராகிய சைவ சித்தாந்தத்தில் ஆர்வம் கொண்டோர் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம். விலை ரூபா 50/=. தொடர்பு: பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (88876)

## புறொயிலர் குஞ்சுகள்

புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி. அல்லது 'கிளீன் சொட்' பின்புறம் யாழ். பஸ் நிலையம்; அல்வாயில் நஞ்சிதன், சுபகணநாதன் பண்ணை வீதி, மாலிசந்தி. (88824)

## தவறிவிட்டது

கோப்பாயைச் சேர்ந்த செ.ஜெகநாதனின் தேசிய அ.அட்டை (இல. 507960235v) ஜெ.தவமணிதேவியின் விசேட அ.அட்டை (இல.0907021279), ஜெ.கார்த்திகாவின் விசேட அ.அட்டை (இல.0907004549) என்பன பண்டத்தரிப்புச் சந்திக்கும் அம்மன் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பண்டத்தரிப்பு பிரதான வீதி, ஐயா கடையில் ஒப்படைத்துதவவும். (88868)

வேலுப்பிள்ளை துரைராசன் (சங்கத்தானை - சாவகச்சேரி) என்பவருடைய தே.அ.அ. (இல.460990211v), வி.அ.அ. (இல. 091050497), சாரதி அனுமதிப்பத்திரம் (இல.247341) என்பன யாழ்ப்பாணத்துக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சு.நாகேஸ்வரி, நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். **T.P.** 3319. (888555)

பலாலி கிழக்கு வயாவிளானைச் சேர்ந்த செல்வராசா மகேஸ்வரி என்பவருடைய விசேட அ.அட்டை (இல.0907014455), தேசிய அ.அட்டை என்பன 03.06.2001 அன்று இருபாலைக்கும் அச்சுவேலிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அச்சுவேலி கண்ணகி அச்சகத்தில் ஒப்படைத்துதவவும். (88849)

இல. 360, கோயில் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த இராமநாதன் புவனேஸ்வரி என்பவருடைய விசேட அ.அட்டை (இல.0902031837) 02.06.2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 56**A**, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (88845)

## ஆங்கிலம் WORK BOOK

ஆண்டு 6 மாணவர்களுக்கான ஆங்கில பாடத்துக்குரிய **New class work Book by Premkumar**. தரமான புத்தகம். விலை ரூபா 70/=. தொடர்பு: பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (88878)

## வேலையாள் தேவை

கோழிகள், ஆடுகள், பூந்தோட்டம் பராமரிப்பதற்கு ஓர் ஆள் தேவை. தங்கி இருந்து வேலை செய்வதற்கு வசதியுண்டு. உடன் நேரில் வரவும். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (88843)

## தவறிவிட்டது

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைச் சேர்ந்த மாணிக்கம் சிவமூர்த்தி (வீடியோ கலாமினி) ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும், (இல. 552372824V) விசேட அடையாள அட்டையும் (இல. 0903020558) 6-6-2001 புதன்கிழமை அச்சுவேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே பிரதான வீதியில் கைதவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**வீடியோ கலாமினி**
*அச்சுவேலி.*

தொலைபேசி இல: 070 - 212431 (C/17056)

## வீட்டு உதவியாளர் தேவை

82 வயதான, அரசாங்க மேல் பதவி ஓய்வூதியருக்கும் மனைவிக்கும் வீட்டைப் பார்க்கவும் வேறு உதவிகளுக்கும் ஓர் ஆண்/பெண உதவியாளர் தேவை. வயது 50-60 விரும்பத்தக்கது. நல்ல சம்பளம் வழங்கப்படும். தங்கும் வசதிகள் வீட்டிலேயே உண்டு.

15-06-2001க்கு முன் நேரில் வந்து யாவற்றையும் கலந்துரையாடி முடிவு செய்யலாம்.

**த.கந்தசாமி,**
*ஓய்வுபெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர்,*
ஞானசாரியார் கல்லூரி வீதி,
துன்னாலை மேற்கு, கரவெட்டி.

(88873)

---

யா/சேர்.வை.து.ம.ம.வி. வேலணை
பழைய மாணவர் சங்க

## வருடாந்தப் பொதுக்கூட்டம் 2001

*இடம்:–* பாடசாலை மண்டபம்
*காலம்:–* 24-06-2001 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணி
*தலைமை:–* **திரு.கு.கணேசலிங்கம்** (அதிபர்)

எமது பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

குறிப்பு:-
I. புதிய நிர்வாகத் தெரிவும், நடப்பு ஆண்டிற்கான பிரேரணைகளும் ஆராயப்படும்.
II. ஆயுள் அங்கத்தவர்களைத் தவிர்ந்த ஏனைய அங்கத்தவர்கள் ஆண்டுச்சந்தாவைச் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் புதிய அங்கத்தவர்களும் இணைந்து கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
*யா/சேர்.வைத்தியலிங்கம் துரைசுவாமி ம.ம.வி. வேலணை.*

**J.X.செல்வநாயகம்**
*செயலாளர்*
(88864)

---

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் நடத்தும்

### அமரர் பேராசிரியர் துரைராசா

அவர்களின்

## நினைவுப் பேருரை

காலம்:- நாளை (11-06-2001) திங்கட்கிழமை காலை 9.30 மணி
இடம்:- **கல்லூரி மண்டபம்**
தலைவர்:- **பேராசிரியர் அ.நவரட்ணராசா**
*(தலைவர், ப.மா.சங்கம்)*
நினைவுப் பேருரை நிகழ்த்துநர்:- **பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
*(தலைவர், வரலாற்றுத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*
*'தமிழ் மக்களின் மரபு வழித் தாயகம் – ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்'*
பேராசிரியரின் நினைவுப் பரிசு பெறுநர்:- **செல்வன் ப.தனுஜன்**
*(பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்)*

பேராசிரியரின் அபிமானிகள் யாவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

(88871) - பழைய மாணவர் சங்கம்.

---

உடுப்பிட்டி
**அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

## பரிசில் நாள் = 2001

காலம்: நாளை (11.06.2001) திங்கட்கிழமை பி.ப 2.30 மணி
இடம்: **கல்லூரி திறந்த வெளியரங்கு**
தலைவர்: **திரு.கி. நடராசா** (அதிபர்)
முதன்மை விருந்தினர்: **பேராசிரியர் இ.குமாரவடிவேல்**
(பீடாதிபதி, பௌதிக விஞ்ஞானத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
பரிசில் வழங்குநர்: **திருமதி குமாரவடிவேல்**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

அதிபர், ஆசிரியர், மாணவர், ஊழியர், பா.அ.சங்கம், பழைய மாணவர் சங்கம்.
(88870)

---

# ஊர்காவற்றுறை பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

**ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரினால் பின்வரும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.**

01. கேள்விப்பத்திரங்கள் 20-06-2001ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்கள், பொது ஸ்தாபனங்கள், பின்குறிப்பிடும் தொகையைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச்சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
03. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் தலைவர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்துறை. என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டும், இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கும் 22.06.2001 நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
04. கேள்விகள் 22.06.2001ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்விசமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
05. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு உரிமையுண்டு.
06. மேலதிக விவரங்களை ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொ. இல: | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | நாரந்தனை பொதுச் சந்தை மீள் நிர்மாணம் | 1250.00 | 125.00 |
| 02. | காரைநகர் வடக்கு விக்காவில் சலவைக்குள கிணறுதொட்டி புனரமைப்பு வேலை | 1000.00 | 100.00 |
| 03. | நாரந்தனை புதுக்குடியிருப்புவீதி திருத்தம் | 1250.00 | 125.00 |
| 04. | தேவாரதம் படகுதிருத்தம் | 2500.00 | 225.00 |
| 05. | எழுவைதீவுக்கு நீர் விநியோகம் செய்யும் படகு திருத்தம் | 1500.00 | 150.00 |
| 06. | எல்லை வரவேற்புப் பலகை அமைத்தல் | 350.00 | 35.00 |

*ஊர்காவற்றுறை பிரதேச சபை,*
*ஊர்காவற்றுறை,*
*08-06-2001*

(C/17044)

**ந.மதனராசா ஜே.பி.யு.எம்**
தலைவர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

# வலி.தென்மேற்கில் நடமாடும் சேவை

சண்டிலிப்பாய்,ஜூன்10

வலி.தென்மேற்கு(சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தின் நடமாடும் செயலக சேவை நாவாலி சென்.பீற்றர்ஸ் றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலையில் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

மானிப்பாய் தெற்கு, நவாலி தெற்கு, நவாலி வடக்கு, நவாலி கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் மக்களின் நலன் கருதி இப்பிரதேச செயலக சேவை நடத்தப்படவுள்ளது என்றும் -

இதற்கான ஒழுங்குகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

(ஐ-7-135)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## உயர்திரு. சரவணமுத்து தேவதாசன்

**B.A.(Dip.) Hons (சமாதான நீதிவான்)**

- ஸ்ரீ வல்லிபுராழ்வார் திருக்கோயில் அறங்காவலர் சபையின் மகாசபைச் செயலர் -
- யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர் -
- கற்கோவளம் ஸ்ரீ கும்மி அன்னையின் அடியவர் -

*வைரவிழாக் காணும் வடமராட்சியின் அருமை மைந்தனே!*
*ஸ்ரீ வல்லிபுர மாயவன் வழங்கிய பஞ்சாமிர்தமே!*
*என்றும் என் மனதை விட்டகலாத நெஞ்சாமிர்தமே!*
*தங்களை முத்தொகுதிகளில் நின்று மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.*

வலிகாமத்திலிருந்து வடமராட்சியில் குடியேறி ஸ்ரீ வல்லிபுர மாயவனை நெருங்கி வழிபாடு செய்து வந்த வேளையில் அங்கு நடைபெறும் திருவிழாக்களில் ஆவணி முதலாவது ஞாயிறு திருவிழாவை எனக்கு வழங்கி மாயவனுடன் நெருங்கிய பிணைப்பையும் இணைப்பையும் ஏற்படுத்திய என் அன்பின் உறைவிடமே! நீடூழி வாழ்க! மாமணியே! அன்பு வள்ளலே!! வாழ்க!!!

தங்களது பொதுப்பணிகள், சமயப் பணிகள் மேன்மேலும் தொடர மாயவனுடனும் மனைவி மக்களுடனும் எங்களுடனும் பல்லாண்டு காலம் இனிது வாழ்க! வாழ்கவே!!

சங்கு சக்கரப் பிரபுவின் தெய்வப் பிராமண சிவாச்சாரியர்கள் எந்நாளும் அர்ச்சித்து ஆராதித்து நல்லாசிகள் வழங்க, கும்மி அன்னை சக்தி மழைபொழிய, ஸ்ரீ சங்கு சக்கரப் பிரபு மகா விஷ்ணு அருள் மழை பொழிய, மகாலட்சுமி அம்பிகை அனைத்து ஐஸ்வரியங்களையும் வழங்க, அல்லல் நீக்கும் அருள் மருந்து தீனபந்து சுவாமி ஓடோடி வந்து காக்க இறைஞ்சி வேண்டி முத்தொகுதிகளில் நின்று பாராட்டி வாழ்த்துகின்றேன்.

*பாராட்டி வாழ்த்துபவர்:*
**திரு.K.N.சச்சிதானந்தன்**
**"இராகுலசூரியன்ஸ் புடைவையகம்"**
*இல.329, பிரதான வீதி, பருத்தித்துறை.*

(C/17055)

*ஸ்ரீ கூடத்து மனோன்மணி அம்மன் கோயிலடி, பிரதான வீதி, சங்கானை, வட்டுக்கோட்டை.*

*சங்கைளம்பதி ஸ்ரீ மாரியம்மன் கோயிலடி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை, காங்கேசன்துறை.*

# தொழில் பயிற்சிகள்

- ★ பிளாஸ்ரிக் தொழில்நுட்பம்.
- ★ ஸ்கிறீன் பிறின்டிங்.
- ★ கொமர்சல் ஆட்.
- ★ எங்கிறேவிங்.
- ★ வொயில் கீற் பதிப்பு.
- ★ இறபர் ஸ்ராம் தயாரிப்பு.
- ★ ஆபரணப்பெட்டி தயாரிப்பு.
- ★ [illegible]ட் தயாரிப்பு.
- ★ சினிமா சிலைட்.

புதிய பயிற்சிகள் இன்று (10.06.2001) ஞாயிறு காலை 9 மணிக்கு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**S.S.யசோதரன் ஆட்ஸ்**

*185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (வின்சர் தியேட்டர் முன்பாக)*

(88892)

# ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந்த், சிம்ரன், கரண், விவேக் மற்றும் பலர் நடித்த

**கண்ணெதிரே தோன்றினாள்**

தினசரி காட்சிகள : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)

15.06.2001 முதல்
**சிட்டிசன்**

(C/17000)

# நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த

**வானவில்**

(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)

(88696)

# லஷ்சுமி இணுவில்

சரத்குமார், தேவயானி, ஆனந்த்ராஜ் நடிப்பில்

**பாட்டாளி**

(ரீல்ஸ்)
காட்சிகள் : 10.30, 2.30 (ப.நே.)

(88904)


# கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

## கூறுவிலை கோரலுக்கான கேள்விப்பத்திரம்

மேற்படி ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்கு கீழ்க்கண்ட பொருள்கள் விநியோகிப்பதற்கும் வேலைகள் செய்வதற்கும் உரிய கேள்விப்பத்திரத்தை எதிர்வரும் (19-06-2001) செவ்வாய்க்கிழமைக்கு முன் ஆலய நிர்வாக சபைச் செயலாளரிடம் பெற்றுப் பூரணப்படுத்தி சமர்ப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

- ☆ நாகர்கோயில் மணல்
- ☆ கல்லு வகைகள்
- ☆ கம்பி வகைகள்
- ☆ பெயின்ற் வகைகள்
- ☆ பலகை வேலைகள்
- ☆ மின்உபகரணப் பொருள்கள்

த.கணேசபிள்ளை *தலைவர்* (88897) இ.இராசலிங்கம் *செயலாளர்*

# வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரின், நான்கு அங்கத்தவர்கள் கொ[illegible] குடும்பம் ஒன்றுக்கு யாழ்.பல்கலைக்கழக சுற்று[illegible]ல் அல்லது நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகளில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு ஒன்று இரண்டு வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கு உடனடியாக வாடகைக்குத் தேவை.

*தொடர்புகொள்க:-*
**விளம்பர இல.1302, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(88895)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் – யாழ்.கிளை

## வேலணைப் பிரிவுத் தேர்தலும் பொதுக்கூட்டமும்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வேலணைப் பிரிவின் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவி தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கான தேர்தலும் பொதுக்கூட்டமும் எதிர்வரும் 24.06.2001 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் யாழ். கிளையின் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நியமனப்படிவங்களை யாழ்.கிளையில் 11.06.2001 – 15.06.2001 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். நியமனப் பத்திரங்கள் 16.06.2001 ஆம் திகதி காலை 9.00 – 12.00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் நியமனப்பத்திரங்களை மீளப்பெறுதல் 18.06.2001 ஆம் திகதி காலை 9.00 - 12.00 மணிவரையும் யாழ்.கிளையில் இடம்பெறும். இந்த அறிவித்தலை சகல அங்கத்தவர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

செஞ்சிலுவைச் சேவையில்
**கௌரவ செயலாளர்**

(C/17059)

# மரண அறிவித்தல்கள்

## சோமசுந்தரம் விமலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், சண்டிலிப்பாய் கிராமசபைத்தலைவர்)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் விமலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) 07.06.2001 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக்கணவரும் விமல்ராஜ் (இ.போ.ச., வவுனியா), சோமநாத் (பிரான்ஸ்), செல்வசுதா ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற தேவிகாராணியின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற அன்னப்பிள்ளை சோமசுந்தரத்தின் (மாவிட்டபுரம்) மருமகனும் மற்றும் நிர்மலா, கலாவதி, இரத்தினராசா (வலயம் வலிகாமம், மருதனார்மடம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவபாதசுந்தரம் (கனடா), சிவராசா (ஓமான்), கந்தசாமி (கொழும்பு), திருஞானம் (ஆஸ்திரேலியா), ஈஸ்வரி (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வேல்முருகு, இராசரத்தினம், குணரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் சம்பந்தியும் விஜயகுகன், யசோக்குமார், விதுசன், அபிதாஅனி, ஜெனுஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2001) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சுந்தரபவனம்", சண்டிலிப்பாய் தெற்கு, சண்டிலிப்பாய்.* (88894)

தகவல்: கு.இரத்தினராசா (மருமகன்)

## ஞானப்பிரகாசம் செபஸ்தியாம்பிள்ளை

(G.S. Pillai)

(ஓய்வு பெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர்)

'செல்லம்ஸ்' உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 54, 2/1, ராஜசிங்க வீதி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவருமான G.S. Pillai நேற்று (09.06.2001) சனிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், லூர்த்தம்மாவின் அருமை மகனும் அருள்மணியின் அன்புக்கணவரும் அருட்தந்தை ஏன்சிலிறொஷான் (ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்), தர்ஷிக்கா, நிஷாந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற தங்கராசாவின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற மோசேஸ் செல்லம் ஆகியோரின் மருமகனும் மனோன்மணி, அந்தோனிப்பிள்ளை காலஞ்சென்றவர்களான கண்மணி, அழகரட்ணம், பூபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் 12.06.2001 மாலை 4 மணிக்கு இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து தெஹிவளை சேமக்காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை அருட்தந்தையர், அருட் சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*'செல்லம்ஸ்' உயரப்புலம், ஆனைக்கோட்டை.*

தகவல்: S.A.தங்கத்துரை (பேறாமகன்)





*உங்கள் குழந்தைகள் வளர்ச்சியற்று சோர்வோடு இருப்பதற்கு போஷாக்குக் குறைபாடும் ஒரு காரணமாக இருக்கலாம்.*

**அப்படியானால்**

அவர்களது ஆரோக்கியத்தைப் பேண நல்ல போஷாக்கு நிறைந்த ஆகாரங்களை அவர்களுக்கு உண்ணக் கொடுங்கள் மற்றும் வளரும் பிள்ளைகள், வயது முதிர்ந்தோர், கர்ப்பிணித் தாய்மார்கள் அனைவருக்கும் ஏற்ற ஒரு முழு உணவுப் பதார்த்தம்.

# ஜீவாகாரம்

***உண்பதற்குத் தயார் நிலையில் உள்ள ஒரு முழு உணவு.***

**அண்ணா அரிசி மா, உழுந்து மா, தோசை மா, குரக்கன் மா, ஆட்டா மா, கடலை மா, இடியப்ப மா, மிளகாய்த் தூள், மஞ்சள் தூள், பற்பொடி, பத்தி, கோப்பி வகைகளையும் நீங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.**

# அண்ணா தொழிலகம்

இணுவில் தெற்கு, இணுவில்.

தொலைபேசி:- 070 - 212298 3565.

(C/17047)

## அனுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்ட

# மிருசுவில் படுகொலைகள் வழக்கை

# சாவகச்சேரி நீதிமன்றுக்கு மாற்றுக

## நகரசபைத் தலைவர் ஜனாதிபதிக்கு பக்ஸ்

வடமராட்சி,ஜூன்10

மிருசுவில் படுகொலை வழக்கு விசாரணைகள் சாவகச்சேரி நீதிமன்றில் இருந்து அனுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டதை உடனடியாக ரத்துச்செய்து, இந்த வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து சாவகச்சேரி நீதிமன்றில் நடத்த ஆவன செய்ய வேண்டும்.

- இவ்வாறு கோரும் அவசர பக்ஸ் ஒன்றை பருத்தித்துறை நகரசபைத் தலைவர் ஐ.சிற்றிங்கேஸ்வரன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அந்த பக்ஸ் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி மிருசுவில் வடக்குப் பகுதியில 8 அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத்தினரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டு மலக்குழிக்குள் போடப்பட்டனர். இது தொடர்பான வழக்கு விசாரணைகள் கடந்த 6 மாத காலமாக சாவகச்சேரி நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தன.

இந்த வழக்கின் இரண்டாவது சந்தேகநபரான கலிந்த திஸநாயக்க மேன்முறையீடு செய்ததை அடுத்து தற்போது இந்த வழக்கு விசாரணைகள் அனுராதபுரம் நீதிமன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

விசாரணைகளைத் தென்பகுதி நீதிமன்றுக்கு மாற்றுவதற்காக சந்தேக நபர்கள் அரசுக்குப் பல நெருக்கீடுகளை வழங்கியதாக அறிகின்றோம். அதில் ஒன்று; யாழ்.சிறையில் உள்ள தமிழ்க்கைதிகளுடன் மோதலில் ஈடுபட்டு கலவரம் விளைவிக்க முயன்றமை.

வழக்கு விசாரணைகளைத் தென் பகுதிக்கு மாற்றியதை மறுபரிசீலனை செய்யுமாறு பாதிக்கப்பட்டவர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். வழக்கைத் தொடர்ந்தும் சாவகச்சேரி நீதிமன்றிலேயே நடத்த வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கக் கூடாது என்ற நோக்கிலேயே இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தீவிரமாக இருக்கின்றனர்.

இன்று யாழ்ப்பாணத்தில் நீதிமன்றங்கள் இயங்குகின்றன. எனவே இந்த வழக்கு விசாரணைகளை யாழ்ப்பாணத்திலேயே நடத்த வேண்டும்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் வறிய நிலையில் உள்ளவர்கள். அனுராதபுரம் சென்று வழக்கை நடத்துவதற்கு இவர்களிடம் வசதி இல்லை. இவர்கள் அனுராதபுரம் சென்றால் இவர்களது உயிர்களுக்கு உத்தரவாதம் இருக்குமா என்பது கேள்விக்குறியே.

அனுராதபுரம் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடக்குமாயின் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்குமா என்பதும் கேள்விக்குறியே.

இந்த வழக்கின் ஒரேயொரு சாட்சியான பொ.மகேஸ்வரன் இன்றும் ஈ.பி.டி.பி. அமைப்பின் பாதுகாப்பிலேயே உள்ளார். அவரை அனுராதபுரம் அழைத்து வருவது சாத்தியமான விடயம் அல்ல.

இந்த வழக்கு அனுராதபுரம் நீதிமன்றுகது மாற்றப்படுமானால் இதுவும் செம்மணி வழக்குப் போன்று இழுத்தடிக்கப்பட்டு காலதாமதப்படுத்தப்படும் நிலை ஏற்படும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காது.

எனவே குடும்பத்தலைவனை, பிளளைகளை, கணவன்மாரை இழந்தோரின் நிலையைக் கருணையுடன் உணர்ந்து இவ்வழக்கு அனுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டதை ரத்துச் செய்யும்படி பாதிக்கப்பட்டோர் சார்பிலும் பிரதேச சபைத் தலைவர் என்ற சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன் - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஆசிரியர் குறிப்பு:-*

எனினும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை ஆட்சேபித்து அரசியல் ரீதியாக எடுக்கப்படும் இத்தகைய நடவடிக்கைகள், மனுக்கள் பலன் தருமா என்ற சந்தேகம் எழுப்பப்படுகின்றது.

மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவால் எழக்கூடிய பாதகங்களுக்கு நிவாரணத்தை உயர்நீதிமன்றில் மனுச்செய்து பெற்றுகொள்வதே வழி என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(ம-173)

# யாழ்.பல்கலையில் இந்த வருடம் 3 ஆயிரம் பேருக்கு பட்டமளிப்பு

## 5 அமர்வுகளில் வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜூன்10

யாழ்.பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்து 313 பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

வழமையாக 3 அமர்வுகளாக நடைபெறும் இந்த வைபவம் இந்தத் தடவை 5 அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

1994ஆம் 1995ஆம் வருட மாணவர்கள் ஒரே தடவையில் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்பட்டதனாலேயே அதிக மாணவர்களுக்கு இந்த வருடம் பட்டங்கள் வழங்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வழமையாகப் பட்டங்கள் பெறும் கலை, வர்த்தகம், முகாமைத்துவம், விஞ்ஞானம், விவசாயம், மருத்துவம், சித்த மருத்துவம் ஆகிய துறைகளின் மாணவர்களுடன் மீன்பிடியியல் டிப்ளோமா, உடற்கல்வி டிப்ளோமா, கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா, பொது நிர்வாகத்தில பட்டப்பின் டிப்ளோமா, நுண்கலைமாணி ஆகிய துறைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் இம்முறை ஒரே நேரத்தில் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

பட்டமளிப்பு விழா தொடர்பான ஆரம்ப கட்டப்பணிகளை யாழ்.பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளதாகவும் -

இனிவரும் காலங்களிலும் ஒக்ரோபர் 6ஆம் திகதியிலேயே பட்டமளிப்பு விழா நடைபெறும் என்றும்-

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

(ம-6)


ஸமது புதிய வீடியோ CD வெளியீடுகள்

1. ஆட்சி
2. தாதா சாஹிப்
3. என் இனிய பொன் நிலாவே
4. கிருஷ்ணா கிருஷ்ணா

வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/17061)


## ஆசிரிய கலாசாலை விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்10

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் புதிய கல்வியாண்டுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகின்றன.

புதிய கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-9)


புதிய வீடியோ CD வெளியீடுகள்

மம்முட்டியின் நடிப்பில்
★ தாதா சாஹிப்
ராஜசேகர் நடிப்பில்
★ ஆட்சி
S.V.சேகர் நடிப்பில்
★ கிருஷ்ணா கிருஷ்ணா
பாண்டியராஜன் நடிப்பில்
★ என் இனிய பொன் நிலாவே
(பிரதிகள் உடன் பெறலாம்)

விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ். றோட்,
கோண்டாவில்.
(88903)



ஸமது புதிய வீடியோ CD வெளியீடு

☆ கிருஷ்ணா கிருஷ்ணா
☆ தாதா சாஹிப்
☆ ஆட்சி
☆ என் இனிய பொன் நிலாவே

பிரதிகளை உடன் பெற்றுக் கொள்ளலாம்.
புதிய பட போஸ்ரர்கள் 75/=

அல்டி
எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/17060)


## சொல்ஹெய்மின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்களை உருவாக்கியிருப்பதாக புலிகளின் தரப்பில் கூறப்படுகின்றது.

சமாதான முயற்சிகளில் இருந்து சொல்ஹெய்ம் புறந்தள்ளப்பட்டமை, நோர்வேயும் ஸ்ரீலங்கா அரசும் சேர்ந்து ஒருதலைப்பட்சமான தம்பாட்டில் உயர் மட்டத்தில் பேச்சு என அறிவித்தமை ஆகியவை தொடர்பான தமது அதிருப்தியை புலிகளின் இன்றைய அறிக்கை வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ)

## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் விமானம் 30 ஆயிரம் அடிகளுக்கு மேல் பறந்து கொண்டிருந்ததனால் தாக்குதலிலிருந்து அது தப்பிக் கொண்டதாகவும் - புலிகள் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட விமான எதிர்ப்பு ஏவுகணை இருபதினாயிரம் அடிகளுக்குள் மட்டுமே தாக்கும் திறன் கொண்டது என்றும் -

சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முதற்கட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ம-6-9)

# பனை மரங்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்10

யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையினால் பனைமரம் தொடர்பாக முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச்சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான தாவடியில் உள்ள பனங்காணியிலேயே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆய்வில் முதற்கட்டமாக, பனைகளுக்குப் பசளையிட்டு, நீர் பாய்ச்சி அதன் பின்னர் பனையில் ஏற்படும் வளர்ச்சி, அப்பனைகளில் இருந்து கிடைக்கும் கள்ளின் அளவு, காய்க்கும் பனங்காய்களின் எண்ணிக்கை என்பன கணக்கிடப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

ஆய்வுக்குரிய வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-4)

# சமயத் தலங்களுக்கு ஞாயிறு தினத்தில் விசேட பஸ் சேவை நடத்த வேண்டும்

## துணைவேந்தர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்10

யாத்திரிகர்களின் நன்மையை கருத்தில் எடுத்து விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். நகரில் இருந்து பிரபலமான சமயத் தலங்களுக்கு விசேட பஸ் சேவையை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

-இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரும், வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்புச்சபையின் இயக்குநர்களில் ஒருவருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளரிடம் கோரியுள்ளார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளருக்கு இது குறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாத்திரிகர்கள் அதிகமாகச் செல்லும் சமயத்தலங்களான வல்லிபுர ஆழ்வார் ஆலயம், செல்வச் சந்நிதி முருகன் ஆலயம், பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில், சாட்டிமாதா கோயில் உட்பட ஏனைய முக்கிய சமயத்தலங்களுக்கு யாழ்நகரில் இருந்து விசேட பஸ் சேவை நடத்தப்படல் வேண்டும்.

பெரும்பாலான யாத்திரிகர்களுக்கும், அரச ஊழியர்கள், மாணவர்களுக்கும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமாக இருப்பதனாலும் -

வழமையான பஸ் சேவைப் பாதைகளில் அத்தினத்தில் பயணிகள் நடமாட்டம் குறைவாக இருப்பதனாலும் -

பாடசாலைச் சேவையில் ஈடுபடும் பஸ்கள் ஓய்வில் நிற்க சந்தர்ப்பம் உள்ளதாலும் -

அத்தகைய பஸ்களைப் பயன்படுத்தி இந்த விசேட பஸ் சேவையை நடத்தி பொதுமக்களுக்கும் யாத்திரிகர்களுக்கும் உதவ ஆவன செய்ய வேண்டும்.

- இப்படி அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

## மூதாட்டியைத் தாக்கிவிட்டு கொள்ளை

தென்மராட்சி,ஜூன்10

வீட்டிலுள்ளவர்கள் இடம்பெயர்ந்தால் தனித்திருந்த மூதாட்டியைப் பயமுறுத்தி அவரிடமிருந்த நகை, பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் அண்மையில் மிருசுவிலில் இடம்பெற்றது.

மூதாட்டியின் வாயில் துணியைத் திணித்துவிட்டு அவர் மயக்கமுறும் வரை தாக்கிய பின்னர் அவர் அணிந்திருந்த தோடு, மூக்குத்தி மற்றும் ஒரு தொகைப் பணம் ஆகியவற்றைக் கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

(ம-117)

## கிளிநொச்சி மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்10

யாழ்பல்கலைக்கழகத்தில் பயிலும் கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு இரண்டாவது முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-6)

## அடுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ஜக்லண்ட் எம்மைச் சந்திப்பது தொடர்பாக இதுவரை எம்மைத் தொடர்பு கொள்ளவில்லை. இது தொடர்பாக எமக்கு உத்தியோகபூர்வ அறிவித்தல் ஏதும் கூடக் கிடைக்கவில்லை.

அப்படிக் கிடைத்தால் அது குறித்துப் பரிசீலிப்போம் என்றும் -

விடுதலைப் புலிகளின் லண்டன் வாட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## தமது லண்டன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படுவதை இடைநிறுத்தி, இடைக்காலத் தடைஉத்தரவு ஒன்றை உயர் நீதிமன்றம் விடுத்திருக்கின்றது.

இதனால் -

சட்டமாக்கும் அதிகாரத்தைக் கொண்ட நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை அது உருவாக்கும் சட்டத்தின் படி செயற்பட வேண்டிய நீதிமன்றத்தினால் கட்டுப்படுத்த முடியுமா? என்ற அரசமைப்புச் சர்ச்சை உருவாகியுள்ளது.

இந்தத் தீர்ப்பை சபாநாயகர் ஏற்றுக் கட்டுப்படுவாரா அல்லது நாடாளுமன்றம் விசேட உரிமை கொண்ட அமைப்பு என்ற அடிப்படையில் நீதிமன்றத் தீர்ப்பைப் புறந்தள்ளிவிட்டு பிரேரணை தொடர்பான வழமையான நடவடிக்கைகளைத் தொடர்வாரா என்ற இக்கட்டான - முக்கியமான - கேள்வி எழுந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் -

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சி சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் அனுரா பண்டாரநாயக்கா தாம் நாட்டில் இல்லாதிருப்பது பல அரசமைப்புக் குளறுபடிகளுக்கு வழி செய்துவிடும் என்று கருதுவதாகக் கூறப்படுகின்றது.

அரசுத் தரப்பிலிருந்து தெரிவான பிரதி சபாநாயகர் ஜெனரல் சரத் முனசிங்கவை, தாம் இல்லாத சமயத்தில் பயன்படுத்தி, பிரேரணையை பிழையான முறையில் செயலிழந்து போகச் செய்யும் நடவடிக்கையில் அரசுத் தரப்பு ஈடுபடலாம் என்றும் அனுரா அஞ்சுவதாகக் கூறப்படுகின்றது.

பிரேரணை தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படுவதற்குத் தடை விதித்து உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்த சமயம், தமது அனுமதியின்றி, சபாநாயகரின் சார்பில் ஆஜராகித் தெரிவித்து, அரச சட்டத்தரணி ஒருவர் பிரசன்னமாகி, இடைக்காலத் தடையை ஏற்பதாக நீதிமன்றத்திடம் தெரிவித்ததாக கூறப்படுகின்றது.

இது சபாநாயகருக்கு சீற்றத்தை அளித்திருப்பதாகத் தெரிகின்றது. தனக்குத் தெரியாமல் தன் சார்பில உயர் நீதிமன்றத்தில் - அதுவும் நாட்டின் உச்ச நீதிமன்றத்தில் - அரச சட்டத்தரணி ஒருவரை ஆஜராக வைத்து, அரசமைப்புச் சிக்கலைத் தோற்றுவிக்கும் ஓர் இடைக்காலத் தடைக்குத் தனது இணக்கமும் உள்ளது என்ற தோற்றப்பாட்டைக் காட்டும் குழறுபடியைச் செய்த அரசு, தான் நாட்டில் இல்லாவிட்டால் இதே விடயத்தில் வேறு குழறுபடிகளைச் செய்துவிடும் என்று அனுரா அஞ்சுகின்றார்.

- இவ்வாறு விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.